# ISTRICT HISTORY

## SOUTH ARCOT

(TAMIL)

ஜில்லா சரித்திரம்
தென் ஆற்காடு

89
ACL-TNAL
00073

BY

P. V. JAGADISA AYYAR
*(Archaeological Survey, Madras)*

WITH A FOREWORD FROM

The Hon'ble Diwan Bahadur

L. D. SWAMIKANNU PILLAI, M.A., B.L., LL. B., C.I.E., I.S.O.

OFFICE OF THE REG...
25 FEB 1925
MADRAS

MADRAS:

RASWAMY NAIDU & SONS

1925

[Price 5 Annas

# DISTRICT HISTORY
# SOUTH ARCOT

ஜில்லா சரித்திரம்

# தென் ஆற்காடு

சென்னை ஆர்க்கியலாஜிகல் இலாகா
P. V. ஜகதீச ஐயரால்
எழுதப்பட்டு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 FEB 1925
MADRAS

சென்னை சட்டசபைத் தலைவர்
ஸ்ரீமான் திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை
அவர்கள் முகவுரையுடன்
கூடியது

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1925

rights reserved] [விலை 5 அணா

# FOREWORD

I cannot commend too highly the educational value of this series of *gazetteers* in Tamil. I have been long wishing that the people of every town and village should have ready to hand a complete guide to objects of local interest and particularly to local antiquarian remains; and this series by a competent archæologist like Mr. P. V. Jagadisa Aiyar will go far to fulfil this lesideratum.

*Fort St. George,*
19-10-1924.

L. D. SAWMIKANNU.

# AUTHOR'S PREFACE

Love for one's own country and institutions is a virtue highly essential in all its citizens for its prosperity and well-being. Every attempt should be made therefore to cherish and cultivate this virtue by *one and all.* The study of the history of one's own country in general, and one's own district in particular, should perforce bring about the desired result in this direction. Here we may refer to the statement in the *Report of the fifteenth Provincial Educational Conference* of 1923. 'It is one of the fundamental principles of pedagogy that the History and Geography to be taught to the young should start with and be based on the study of the History and Geography of the district or region in which the pupil lives and be correlated to his actual daily experience.' It is the study of the History of our ancient times and ancient rulers that should rouse in our youths a feeling of reverence and esteem for our ancient rulers and their works and institutions.

Our youths, nay our countrymen and countrywomen too, seem to be under the impression that our land, unlike others, cannot boast of a history from the records of our rulers and historians. This is perhaps due to the fact that books on the history of our land put into their hands are those containing materials culled by foreigners. Here we may point out the fact that in our country historical facts and events of ancient days and

ancient rulers have been carefully preserved *imperishably* and *unalterably* in Epigraphical records on temple walls, copper-plate grants and so on.


Our present Government have collected and published in the *Gazetteers* of the districts and the *Reports of the Epigraphical* and *Archæological departments* a good deal of valuable historical information relating to each district, especially of ancient days and ancient rulers. From out of the facts based on these research works, a series of booklets containing summaries of historical events and other particulars of the various districts, is issued in vernaculars, for the use of our school-going boys and girls and this volume is one of them.

The plan adopted in compiling these booklets is that of giving particulars relating to the situation, people etc., of each district in the general introduction, the political history proper from the beginning up to the occupation by the British in chapter I, and the Gazetteer relating to the historically important places in chapter II. In the case of the Madras district alone, the history relating to the acquisition by the English of the various parts of the presidency is given in the introduction, the history of the city together with the founding of Fort St. George in chapter I, and the various institutions useful to the people, maintained by government and by private bodies, in chapter II.

June 23, 1924. P. V. JAGADISA AYYAR.

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| | பூர்வபீடிகை (அமைப்பு முதலிய விவரங்கள்) | 1-14 |
| I. | தேச சரித்திரம் - - - - | 13 |
| II. | முக்கிய இடங்கள் - - - | 33 |



78° 30'
79° 0'
79° 30'
80° 0'
12° 30'
12° 0'
11° 30'
தென் ஆற்காடு ஜில்லா
செங்கற்பட்டு ஜில்லா
வடக்ஆற்காடு ஜில்லா
மரக்காணம்
திண்டிவனம் தாலூக்கா
விழுப்புரம் தாலூக்கா
புதுச்சேரி
நெல்லிக்குப்பம்
கடலூர் தாலூக்கா
கள்ளக்குறிச்சி
ஆத்தூரிலிருந்து
விருத்தாசலம்
சேலம் ஜில்லா
திருச்சிறாப்பள்ளி ஜில்லா
தஞ்சாவூர் ஜில்லா
வங்காளக் குடாக் கடல்

# தென் ஆற்காடு ஜில்லா

## பூர்வ பீடிகை

### (அமைப்பு முதலிய விவரங்கள்)

இந்த ஜில்லா சென்னைக்குத் தெற்கில் சென்னை ராஜதானியின் கீழ் சமுத்திரக் கரையில் இருக்கிறது. (படம் 1). இதன் வட எல்லையில் செங்கல்பட்டு, வட ஆற்காடு ஜில்லாக்கள் இருக்கின்றன. மேற்கில் சேலம் ஜில்லாவினாலும், தெற்கில் திரிச்சிராப்பள்ளி ஜில்லாவினாலும், தென்கிழக்கு மூலைக்கோடியில் தஞ்சாவூர் ஜில்லாவினாலும், இந்த ஜில்லா சூழப்பட்டிருக்கிறது. தெற்கு எல்லை இந்த ஜில்லாவையும் திருச்சிராப்பள்ளி ஜில்லாவையும் பிரிக்கும் வெள்ளாறு என்ற நதியினாலும், இந்த ஜில்லாவையும் தஞ்சாவூர் ஜில்லாவையும் பிரிக்கும் கொள்ளிடத்தினாலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வடக்கிலும் மேற்கிலும் இயற்கையமைப்பினால் பொழி நிர்ணயிக்கப்பட் டிருக்கவில்லை.

இப்போது இந்த ஜில்லா எட்டுத் தாலுக்காக்களாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. அவையாவன:—

| | |
|---|---|
| (1) கூடலூர் | (5, திருக்கோவிலூர் |
| (2) சிதம்பரம் | (6) செஞ்சி |
| (3) விருத்தாசலம் | (7) திண்டிவனம் |
| (4) கள்ளக்குறிச்சி | (8) விழுப்புரம் |

இந்த ஜில்லா 4207 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ளது 2284 கிராமங்களடங்கியிருப்பதுடன், 2,320, 085 ஜனத் தொகையுடையது.

இந்த ஜில்லாவிற்கு இப்பெயர் ஏற்பட்டதற்குக் காரணம், இது 1801-வது வருஷத்தில் கம்பெனிக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டது முதல் 1808-வது வருஷம் வரை பாலாற்றிற்குத் தெற்கிலிருந்த ஆற்காடு "முகல் ஸபா"(Mughul Sabha) என்ற பாகமாக இருந்து வந்தது. அக் காலத்திய தஸ்தாவேஜுகளில் அது ஆற்காட்டின் தென்பாகமாய் இருந்தது. ஆற்காடு என்ற பதம் கால்ட்வெல் (Caldwell) என்ற பாதிரியாரால் ஏற்படுத்தப்பட்டுப் பிறகு யூல், பர்னல் என்றவர்களாலும் வழங்கப்பட்டுவந்தது. பாலாற்றைச் சுற்றி ஆறு காடுகள் இருந்ததாகவும் அவைகள் ஒவ்வொன்றிலும் ஒரே கணக்கான ரிஷிகள் இருந்ததாகவும் பண்டைக்காலத்திய பரம்பரையான கதை ஒன்றுளது. அக்கதையிலிருந்தும் தமிழில் ஏற்பட்டிருந்த "ஆறு காடு" (வடமொழியில் ஷடாரண்யம்) என்ற பெயரை ஒட்டி ஆற்காடு என்ற பெயரைக் கால்ட்வெல் இட்டாராம்.

இந்த ஜில்லாவின் பெரும் பாகம் ஒரு சம வெளி. இது கொஞ்சம் கொஞ்சமாகக் கிழக்கில் சமுத்திரத்தை நோக்கிச் சரிந்திருக்கிறது. இங்குள்ள குன்றுகள் தென்மேற்கு எல்லையிலுள்ள கல்ராயன் குன்றுகள். இவை செஞ்சிக்குத் தென்மேற்கிலுள்ள உயரமான பாறைகளின் கூட்டமே ஒழிய வேறில்லை. இவைகளைச் செஞ்சிக் குன்றுகள் எனக் கூறலாம். இவைகளில் பிரசித்தமானது கூடலூ

ருக்கருகிலுள்ள கேப்பர்க் குன்றுகளும் புதுச்சேரிக்கு மேற்கிலுள்ள செங்குன்றுகளும் (Red Hills) அடங்கியுள்ள தாழ்ந்த செம்மண் பீடபூமியே. இக் கல்ராயன் குன்றுகள் கள்ளக்குறிச்சித் தாலூக்காவின் மேற்குக் கோடியில்—இருப்பதுடன் இந்த ஜில்லாவின் அம்மூலையை அடுத்த சேலம் ஜில்லாவிலிருந்து பிரிக்கிறது. தவிரவும் அவைகள் பெரும்பாகம் சேலம் ஜில்லாவிலேயே ஏற்பட்டு, அதற்கும் தென்ஆற்காடு ஜில்லாவிற்கும் எல்லையாக ஏற்பட்டிருக்கிறது. இந்த தென்ஆற்காடு ஜில்லாவிலும் அடுத்த வடஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த திருவண்ணாமலைத் தாலூக்காவிலும், அடங்கியுள்ள இச்குன்றுகளின் பாகம் இருபத்தைந்து மைல் நீளமும், எட்டு முதல் பன்னிரண்டு மைல்கள் கூட அகலமும் வாய்ந்துள்ளதாக இருக்கிறது. இது ஒரே உயரம் வாய்ந்திருப்பதுடன் தூரத்துப் பார்வைக்கு ஒரு பெரிய சுவர், நாட்டை மேற்கிலிருந்து பிரிப்பதுபோல் இருக்கிறது. இதன் இரு கோடிகளிலும் மலைக் கணவாய்க ளிருக்கின்றன. தெற்கில் ஆத்தூர்க் கணவாயும், வடக்கில் செங்கம் கணவாயும் சேலம் ஜில்லாவிற்கு வழிகளாக ஏற்பட்டிருக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சண்டைகளில் இக்கணவாய்கள் முக்கியமானவைகளாக ஏற்பட்டிருந்தன. ஏனெனில் ஹைதரது சைனியங்கள் நாட்டின் இந்த பாகத்திற்குப் போக சௌகரியமான வழிகள் அவைகளே. இக்கணவாயிருப்பது தென்மேற்குப் பருவக்காற்றுக் காலங்களில் நன்கு புலப்படும். ஏனெனில் அப்பொழுது பலமான

குளிர்ச்சி வாய்ந்த இளங்காற்று அலைகளின் வழியாக வீசிகொண்டிருக்கும். கீழே இருந்து பார்க்க இத்தொடர் சமஉயரம் வாய்ந்துள்ளதாகக் காணப்பட்டாலும், இதில் உண்மையான பீட பூமிகள் இல்லை. ஏனெனில் பள்ளத் தாக்குகள் பிரவாகத்தினல் அனேகம் பள்ளங்களும், குட்டைகளும், மடுக்களும் அடங்கியுள்ளவைகளாக ஏற் பட்டு விடுகின்றன.

இது சாதாரணமாகச் சரிந்திருப்பது கீழண்டைப் புறம். அதாவது தென்ஆற்காடு ஜில்லாவின் பக்கமாகவே ஆதலின் இதன் வழியாகப் பாயும் நதிகள் இத்திசை யாகத்தான் ஓடுகின்றன. முக்கியமான நதிகள் மணிமுக்தா நதி, கோமுக நதி, மயூர நதி முதலியன.

மேற்கூறியுள்ள குன்றுகளுக்குக் கல்ராயன் குன்றுகள் என்றபெயர் ஏற்பட்டதற்கு ஒரு காரணக்கதையுமுள்ளது. கல்விராயன் என்ற பதம் கல்ராயன் என மாறி விட்டதாம். பெரிய கல்விராயன், சின்னக்கல்விராயன், குரும்ப கவுண்டன், சடைய கவுண்டன், அரிய கவுண்டன் என்றபெயர்கள் வாய்ந்த ஐந்து சகோதரர்கள் காஞ்சீபுரத் திலிருந்து வந்து மேற்கூறி யுள்ள குன்றுகளில் தங்கி, அதை அவர்களுக்குள் பங்கிட்டுக் கொண்டார்களாம். எல்லாவற்றிலும் அதிக உன்னதமாக விருந்த தெற்கு-தென் மேற்கு பாகங்களிருந்த குன்றுகளைப் பெரிய கல்வி ராயன் எடுத்துக் கொண்டனனும். ஆதலால் அவை களுக்குப் "பெரிய கல்விராயன்" குன்றுகள் என்ற பெயர் ஏற்பட்டதாம். மேற்கில் சேலம் ஜில்லாவில் தாழ்மையான சரிவுகளிலிருந்த குன்றுகள் மற்றவைகளை

விடத் தாழ்ந்திருந்ததால் அவைகள் சின்னக் கல்விராயனது பாகக் குன்றுகளென வழங்கப்பட்டு வந்தனவாம். மற்றப்பாகங்களும் மற்றச் சகோதரர்கள் பாகமாக ஏற்பட்டு, மொத்தத்தில் இக்குன்றுகளின் சேர்க்கைக்கே கல்ராயன் குன்றுகள் என்ற பெயர் ஏற்பட்டதென்றதுதான் மேற் கூறியுள்ள காரணப் பெயர்க் கதை.

தென்ஆற்காடு ஜில்லாவின் பக்கத்திலிருந்து இக்கல்ராயன் குன்றுகளின் மீதேறிச் சென்றிருக்கும் ஐரோப்பியர்களது தொகை மிகவும் சுருக்கமேயாகும். இங்கு பார்க்கக் கூடிய விசேஷமான இடம் இக்குன்றுகளின் தொடரின் தென்கிழக்குக்கோடியின் ஓரத்திலுள்ள சின்னத் திருப்பதிக்கோவிலே. அங்கிருந்து பார்த்தால் காட்சி மிகவும் அழகா யிருக்கிறதென்று 1872-வது வருஷத்தில் அங்கு சென்றிருந்த ஒரு ஐரோப்பியர் கூறியிருக்கிறார். தாம் தென் இந்தியாவில் பார்த்த காட்சிகளிலேயே அது சிறந்த தென்பது அவரது அபிப்பிராயம்.

மேற்கூறிய கல்ராயன் குன்றுகளுக் கடுத்தது செஞ்சிக் குன்றுகள். தோற்றத்தில் இவைகளுக்கும் கல்ராயன் குன்றுகளுக்கும் மிகவும் வித்தியாசம் உண்டு. கல்ராயன் குன்றுகளின் சிகரங்கள் நாம் மேலே கூறியுள்ளவாறு அனேகமாக மேடுபள்ள மில்லாமலிருப்பதுடன், அவைகளின் பக்கங்கள் யாதொரு தடைகளுமே ஏற்பட்டிராது, புல்லும் காடும் வளரக்கூடிய மண்ணினால் மூடப்பட்டு மிருக்கின்றன. செஞ்சிக் குன்றுகளோ வெனில் ஒரு வாளின் பற்கள்போன்ற தோற்றம் வாய்ந்திருப்பதுடன் மத்திய பாகத்தில் அனேகமாய்ப் பெரும் பாகம்

பாறாங்கற்களால் கூடியிருப்பதுடன் நாலா பக்கங்களிலும் கடத்தற் கரிய கூழாங்கற்கள் நிறைந்துள்ளவைகளாக ஏற்பட்டிருக்கின்றன.

இந்த ஜில்லாவிலுள்ள மூன்றாவது குன்றுகளின் தொடர் கூடலூருக்கு மேற்கிலுள்ள "கேப்பர்குன்று" பீடபூமி, செம்மண் பருக்காங் கற்கள் அடங்கியுள்ள புதுச்சேரிக்குப் பத்துமைல் தூரத்திற்கு வடக்கில் ஆரம்பித்துத் தெற்குத் தென் மேற்காக ஸ்ரீமுஷ்ணம் வரை சென்றிருக்கும் பிராந்தியத்தின் ஒரு பாகமே இது. இக்குன்றுகளுக்குக் கேப்பர் குன்றுகள் என்ற பெயர்வந்தது பிரான்ஸிஸ் கேப்பர் (Francis Capper) என்ற ஒரு ராணுவ உத்தியோகஸ்தரின் பெயரிலிருந்து. அவர் 1798 வது வருஷத்தில் அதிகாரிகளின் அனுமதியின்மேல் இக்குன்றுகளின்மேல் காடடர்ந்திருந்த முன்னூறடி நீளம், இருநூறடி அகலம் பூமியை வளைத்துக் கொஞ்ச பாகத்திலிருந்த காட்டை அழித்து ஒரு வீடு கட்டிக்கொண்டனராம். 1805-வது வருஷத்தில் இந்தச் சொத்து அவரால் பிரேஸர் என்ற ராணுவ உத்தியோகஸ்தருக்கு மாற்றப்பட்டு, 1815-வது வருஷத்தில் அவருக்கது சர்க்காரால் கொடையாக அளிக்கவும் பட்டதாம். உடன்படிக்கை நிபந்தனையின்படி அது திரும்பவும் சர்க்கார்வசமா யிருக்கிறது. கேப்பர் என்ற ராணுவ உத்தியோகஸ்தன் கட்டியிருந்ததாகக் கூறப்பட்டுள்ள வீட்டின் யாதொரு அடையாளமும் அங்கே இப்பொழுது காணோம்.

தென் ஆற்காடு ஜில்லாவில் ஓடும் நதிகளெல்லாம் கிழக்கு முகமாக ஓடி, வங்காளக் குடாக்கடலில் விழுகின்

றன. தெற்கு வடக்காக ஓடும் நதிகளுள் முக்கியமானவை செஞ்சிநதி, பெண்ணையாறு, கெடிலம், உப்பனாறு, வெள்ளாறு, கொள்ளிடம் முதலியன. செஞ்சி நதிக்கு வராக நதி யென்ற பெயரும் உண்டு. இதற்கு ஜலம் மழையினால்தான் ஏற்படவேண்டும். அதிகமான ஜலம் இதில் ஓடுவ தில்லை.

பெண்ணையாறு மைசூர் ராஜியத்தில் நந்தி துர்க்கத்திற்குக் கிழக்கில் சென்னகேசவ மலையில் உற்பத்தியாகிறது. இதற்கு "தக்ஷிண பிநாகினி" என்ற பெயரும் உண்டு. உத்தரபிநாகினி என்ற நதியிலிருந்து வித்தியாசம் கண்டுகொள்ள அப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. "பிநாகா" என்ற பதத்திற்கு சிவதநுசு என்று அர்த்தம். மேற்கூறிய இரு நதிகளும் வளைந்து சென்றிருப்பது ஒரு வில்லின் வளைவை ஒத்திருப்பதிலிருந்து அப்பெயர்கள் ஏற்பட்டன போலும். ஆனால் இந்த ராஜதானியில் எங்கும் இந்நதி பெண்ணையாறு என்று வழங்குகிறது. பெண்ணையென்றால் பனைமரமென்ற பொருள் தரும். எக்காரணம் பற்றிப் பனைமரத்தின் பெயரை இந்நதிக் கிட்டிருக்கக் கூடுமென்று தெரியவில்லை.

பெண்ணை யாற்றைப்பற்றிப் பெரியபுராணம் பின் வருமாறு கூறுகிறது:—

"புனப்பெண்ணை மணிபிறெடுப் புறவினறும்
புதுமலரின்
கனப்பெண்ணி திரைசுமந்து கரைமருங்கு
பெரும் பகட்டே

ரினப்பன்னை யுழம்பண்ணை யெறிந்துலவி
யெவ்வுலகும்
வனப்பெண்ணை வரும்பெண்ணை மாநதியாய்
வளம் பெருகும்

*　　　*　　　*

நறையாற்றுங் கழுகுநவ மணிக்கழுத்தி
னுடன்கூந்தற்
பொறையாற்று மகளிரெனப் புறம்பலைதண்
டலைவேலித்
துறையாற்ற மணிவண்ணச் சுரும்பிரைக்கும்
பெரும் பெண்ணை
நிறையாற்று நீர்கொழுந்து படந்தேறு
நிலைமையதால்.

கெடிலநதி, கள்ளக் குறிச்சி தாலூக்காவில் உற்பத்தியாகி இந்த ஜில்லாவின் குறுக்காகக் கிழக்குநோக்கி ஓடுகிறது. இது புதுக்கூடலூர்ப் பட்டணத்தின் வழியாக ஓடி மஞ்சக் குப்பத்தையும் திருப்பாதிரிப்புலியூரையும் பிரிக்கிறது. பிறகு அது செயிண்டு டேவிட்கோட்டை (Fort St. David) க் கருகில் கடலில் விழுகிறது. பெரிய புராணத்தில் இது கெடிலம் என்றே கூறப்பட்டிருக்கிறது. கெடிலம் என்றால் ஆழ்ந்தவளைகுடா என்று பொருள் பெறும். இந்நதியின் அடியிலிருந்து ஏற்படும் அனேக ஊற்றுகளைக் காரணமாகக் கொண்டு அப்பெயரை இட்டனர்போலும். இந்நதிக்கு, கருடநதி யென்ற இன்னொரு பெயரும் உண்டு. திருவேந்திபுரத்துக் கோவிலிலிருக்கும் விஷ்ணு தாகசாந்திசெய்து கொள்ள

ஜலம் வேண்டுமென, அவரது வாகனமாகிய கருடன் தனது மூக்கினால் ஒரு வாய்க்கால் கிழித்து அதன் வழியாக மேற்கூறிய நதியிலிருந்து கோவிலின் அருகில் ஜலம்வரும் படி செய்ததாகக் கூறப்பட்டிருக்கும் கதையிலிருந்து கருடநதி என்ற பெயர் வந்தது போலும்!

உப்பனாறு அல்லது பரவனாறு என்ற நதி விருத்தாசலம் தாலூக்காவில் உற்பத்தியாகிச் சிதம்பரம் கூடலூர் எல்லையின் வழியாகக் கிழக்குமுகமாக ஓடி கெடிலநதியின் முகத் துவாரத்தின் வழியாகக் குடாவில் விழுகிறது.

வெள்ளாறு என்றால் "சுவேத நதி," அதாவது வெண்மையான நதி எனப் பொருள்படும். சேலத்தில் உற்பத்தியாகும் வசிஷ்டநதி, சுவேதநதி என்ற இருநதிகள் சேர்ந்து ஆகியுள்ள நதியே இந்த நதி. மணி, முக்தா என்ற இரு நதிகள் சேர்ந்து ஏற்பட்ட மணிமுக்தா நதி ஸ்ரீமுஷ்ணத்திற்கு நான்கு மைல்களுக்குக் கிழக்கில் இத்துடன் வந்து கலக்கிறதுமன்றி இதன் உபநதியாகவும் ஏற்படுகிறது.

இந்த ஜில்லா கொஞ்சம் கொஞ்சமாக மேற்கிலிருந்து கிழக்குப்புறமாக சமுத்திரத்தை நோக்கிச் சரிந்திருப்பதுமன்றி வடக்கிலிருந்து தெற்கிலும் சரிந்திருக்கிறது. திண்டிவனம் ரயில்ஸ்டேஷனும், விழுப்புரம் ரயில்ஸ்டேஷனும் சமுத்திரமட்டத்திற்கு 140 அடி உயரத்தில் இருக்கின்றன. ஆனால் குடாவிலிருந்து ஏறக்குறைய அதே தூரத்திலுள்ள பண்ணுருட்டியில் அந்த மட்டம் 83 அடியுள்ளதாகத் தாழ்ந்தும், சாந்தியாததோப் அணைக்கட்டில் 39 அடி மட்டமாகத் தாழ்ந்தும் போயிருக்கிறது.

இந்த ஜில்லாவின் நிலம், நில்வரி நிர்ணயித்தின் பொருட்டு நடத்தப்பட்ட செட்டில்மெண்டின்படி மூன்று விதங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அவை (1) கருமண்பூமி, (2) இரும்புக் கலப்புள்ள செம்மண் பூமி, (3) மணற்பாங்கான பூமி, இவை திரும்பவும்களர், வண்டல், மணல் எனப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. சமுத்திரத்திற் கருகிலுள்ள பாகம் ஈரம் வாய்ந்திருக் கிறது. ஆயினும் இந்த ஜில்லா சுதேசிகளுக்கும் ஐரோப் பியர்களுக்கும் தேஹ ஆரோக்கியமான ஜில்லாவே. தேஹ ஆரோக்கிய மலைப்பிரதேச ஸ்தலம் ஐரோப்பியர் களுக்கு ஐரோப்பிய கண்டத்திய வழக்கப்படி இந்தியா வில் ஏற்படுமுன் கூடலூரே தேஹஆரோக்கியம் வாய்ந்த இடமாக நோயாளிகள் அதிகமாக ஏற்பட்ட ராணுவங்கள் இங்கு அனுப்பப்படுவதும் வழக்கமா யிருந்திருக்கிறது.

இந்த ஜில்லா லோகங்களுக்குப் பேர்போனதன்று. கட்டிடங்களுக்கு உபயோகமாகக் கூடிய கற்களில் வியா பாரம் நடக்கிறது. பண்ணுருட்டிக் கருகில் கெடிலம் நதி யின் தென்கரையில் இளக்கமான உருவங்கள் செய்யத்தக்க மிருதுவாயும் கெட்டியாக ஒட்டிக்கொள்ளக்கூடிய தாயு முள்ள ஒருவித களிமண் அகப்படுகிறது. அதைக்கொண்டு அநேக விதமான பொம்மைகள் செய்து விற்கிறார்கள். அநேகவித பழங்கள், ஹிந்துக்கள் வணங்கும் மூர்த்திகள் முதலானவைகளின் உருவங்கள் மேற்கூறிய களிமண்ணி னல் செய்து காயவைத்துச் சுடப்பட்டு வர்ணம் பூசி விற்கப் படுகின்றன. கல்ராயன் குன்றுகளில் சில விடங்களிலும்,

கள்ளக்குறிச்சித் தாலூக்காவில் சில விடங்களிலும் காந்த இரும்புக் கனிகள் அகப்படுகின்றன.

ரிசெர்வ் பெரிய காடுகள், வெகு நாளாக இருக்கும் காடுகள் இவைகளில் அநேக வித செடிகள், மரங்கள் ஔஷதிகள் முதலியன இருக்கின்றன.

இந்த ஜில்லாவின் கால் நடைகள் மிகவும் அற்ப மானவைகளே. இந்த ஜில்லாவிலுள்ள குடியானவர்கள் கால் நடை அபிவிர்த்தியில் ஊக்கம் வாய்ந்திருக்கவில்லை. தவிர இந்த ஜில்லாவில் கால் நடைகள் மேயக்கூடிய இடங்களும் சரியான இடங்கள் அல்ல.

இந்த ஜில்லாவில் இரு வகை ஆடுகளிருக்கின்றன. ஒன்று செம்மறி யாடு, மற்றொன்று குறும்பாடு. செம்மறி யாடுகள் புலங்களில் கிடைகட்டுவதற்கும் அவைகளின் மாமிசம் சாப்பிடுவதற்கும் வளர்த்து வரப்படுகின்றன. இந்த ஜில்லாவின் தென்மேற்கு பாகத்தில் மாத்திரம் காணப்படும் குறும்பாடுகள் இடையர் ஜாதியைச் சேர்ந்த கன்னடம் பேசும் குருப்பர்களால் பராமரிக்கப்பட்டு அவைகளின் உரோமம் ஒருவித மோட்டாவான கம்பளங்கள் நெய்ய உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு காலத்தில் இந்த ஜில்லாவில் கல்ராயன் குன்றுகளில் யானைகளும், அங்கு இன்னும் சில இடங்களில் புலிகளும் இருந்தனவாம். ஆனால் சென்ற அநேக வருஷங்களாக அவைகள் ஒன்றுமே காணப்படவில்லை. ஏதோ சிற்சில காலங்களில் கல்ராயன் குன்றுகளிலும், செஞ்சியையும் இன்னும் சில இடங்களையும் சுற்றியுள்ள குன்று வெளிகளிலும் கரடிகள் காணப்படுவ

னுண்டாம். செஞ்சியைச் சுற்றியுள்ள குன்று வெளிப்பிர தேசங்களில் சிறுத்தைகள் இருக்கின்றன. கூழாங்கற்கள் சிதறிக் கும்பல்கள் கும்பல்களாக கிடப்பது அவைக ளிருக்க சௌகரியமான குகைகளாக ஏற்பட்டிருக்கின் றன. 1903-வது வருஷத்தில் பதின்மூன்று மனிதர் களும் 451-கால்நடைகளும் சிறுத்தைகளுக் கிரை யானதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. இருபத் தைந்து சிறுத்தைகள் கொன்று கொண்டு வரப் பட்டதற்கு வெகுமதி அளிக்கப்பட் டிருக்கிறது. கள்ளக்குறிச்சியில் கழுதைப்புலிகள் உண்டு. மான் ஜாதி களில் சாம்பார் ஜாதி காணப்படுவ தில்லை. செஞ்சிக் காடுகளிலும் கல்ராயன் குன்றுகளிலும் புள்ளிமான்கள் காணப்படுகின்றன. ஸ்ரீமுஷ்ணத்தைச் சுற்றிலும் அவை கள் முன்னொரு சமயம் ஏராளமாக இருந்தனவாம். 1858-வது வருஷத்திய செட்டில்மெண்டு ரிப்போர்ட்டில் அவைகளால் பயிர்களுக்கு நேர்ந்த கெடுதிகள் கூறப்பட் டுள்ளன. அநேக இடங்களில் காட்டுப்பன்றிகள் உண்டு. கொள்ளிடத்திலிருந்து பிரியும் கால்வாய்களில் முதலைகள் உண்டு. சில வருஷங்களுக்குமுன் சிதம்பரத்திற் கருகி லுள்ள கான்சாஹேப் கால்வாயில் ஏராளமான முதலைக ளிருந்தன. குளங்கள் முதலான இடங்களில் மீன்களும் யதேஷ்டமாகப் பிடிக்கப்படுகின்றன. கடல் மீன்களும் பிடிக்கப்படுகின்றன.

---

# அத்தியாயம் 1

## தேச சரித்திரம்

சரித்திர ஆரம்ப காலத்திற்குமுன் இந்த ஜில்லாவிலிருந்த பூர்வீக குடிகளைப்பற்றி நமக்குத் தெரிவதெல்லாம் கல்ராயன் குன்றுகளிலிருக்கும் அவர்களது கைவேலைப் பாடுகளே. அத்தொடர்களிலிருக்கும் மலையாளிகளுக்கு அக்கல்வேலைகளின் காரணம் தெரியாதது பற்றி, அவைகளைப் பரிசுத்தமான பொருள்களென மதித்துத் தங்களது கோவில்களில் வைத்துப் பூஜித்து வருகிறார்கள். யாருமே இக்கல்லால் செய்யப்பட்டுள்ள ஆயுதம் முதலானவைகளைச் சேர்த்துத் தரப்படி பிரித்துவைக்க முயற்சி எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அத்தகைய கருவிகள் அகப்படலாம் என்று நினைக்கக்கூடிய செஞ்சிக் குன்றுகள் முதலான இந்த ஜில்லாவின் இதரஇடங்களில் அவைகளுக்காக யாருமே தேடிப்பார்த்ததாகவும் தெரியவில்லை.

கல்லினால் செய்த சாமான்களுக்குப் பிறகு இச்சரித்திர ஆரம்ப காலத்திற்கு முன்னிருந்த ஜனங்களது பிரேதத் தொட்டிகள் கவனிக்கத் தக்கவை. அவைகள் அனேகம் காடுகளில் காணப்படுகின்றன. மற்ற இடங்களில் காணப்படுபவைகளைப்போலவே அவைகளும் இருக்கின்றன. ஆறடி நீளம், நாலடி அகலம், மூன்றடி ஆழமுள்ள அறைகளாகவே கல்லறைகள் பிரேதங்கள் அடக்கம் செய்ய ஏற்பட்டிருக்கின்றன. இவ்வறைகள் சுவர்கள் எடுக்கப்பெற்று, தரைக்குக் கற்கள் போடப்பட்டுக் கூரைகளுடனும் கூடியிருக்கின்றன. இவைகளுக்குள் எலும்புத் துணுக்குகளும்.

சட்டி, இரும்பு முதலியவைகளும் சாதாரணமாகக் காணப் படுகின்றன. இந்த ஜில்லாவில் திருக்கோவலூரைச் சேர்ந்த தேவநூர் என்னுமிடத்தில் இவைகள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் பற்பல இடங்களிலும் காணப் படுகின்றன. செஞ்சிக்கு ஏழுமைல் மேற்கிலுள்ள சத்திய மங்கலத்தில் சுமார் பன்னிரண்டு அறைகள் ஏற்பட்டு ஒவ்வொன்றும் குத்திட்டு நாட்டப்பட்டிருக்கும் தட்டையான கற்களின் வட்டத்துடன் கூடியிருக்கிறது. ஒரு வட்டம் இருபத்திநாலு கற்களால் ஏற்படுத்தப்பட்டு முப்பதடி குறுக்களவுடன் கூடினதாயு மிருக்கிறது.

எந்த ஜாதியார்கள் மேற்கூறிய கல்லறைகளைக்கட்டியிருக்கலாமென்பது நிர்ணயிக்க முடியாத விஷயம். அவைகளைக் கட்டி முடித்தவர்களுக்கும், சிலாலிகிதங்களிலிருந்து ஏற்படும் புராதன குடிகளுக்குமிடையில் நமக்கேற்படுவது அந்தகாரமே ஒழிய வேறில்லை. ஏனெனில் அக்காலத்திய யாதொரு சம்பிரதாயமும், ஐதீகமும் ஏற்பட்டிருக்கவில்லை என்றதுடன் அக்காலத்தைப்பற்றிக் கூறும் யாதொரு நூலுமே ஏற்பட்டிருக்கவில்லை. புராதன தமிழ் நூல்களில் பெண்ணைநதியின் கீழ்ப்பாகங்களில் இருபக்கங்களிலு முள்ள நாடுகளைப்பற்றிக் கூறியிருப்பது வாஸ்தவமே. அவைகளுக்கு அருவநாடென்ற பெயரிட் டழைத்திருக்கின்றனர். ஆனால் அவ்விடத்திய பூர்வீகக்குடிகளைப்பற்றி அவைகளில் யாதுமே கூறப்பட்டிருக்கவில்லை. இந்த அருவ நாட்டிற்கு மேற்கிலும், கல்ராயன் குன்றுகளுக்குக் கிழக்கிலும் மலாடு எனப்படும் மலயமன்நாடும் அதற்கு ராஜதானி

கோவலெனப்படும் திருக்கோவலூரிலும் இருந்ததாகத் தெரிகிறது.

அசோக சக்கரவர்த்தியின் பிரகடனம் ஒன்றில் கூறப்பட்டிருப்பதைத் தவிர, சிலாலிகிதங்கள், செப்புப் பட்டயலிகிதங்கள் முதலியவைகளிலிருந்து நமக்குக்கிடைக்கும் தமிழ் நாட்டைப்பற்றிய சரித்திரம், பல்லவர்களது காலத்திற்கு முன் போவதில்லை. இந்த சகாப்தத்தின் ஆரம்ப நூற்றுண்டுகளில் காஞ்சீபுரத்தில் பல்லவர்கள் ஆண்டுவந்தார்கள். புராதன ஐதீகப்படி தென்ஆற்காடு ஜில்லா, தொண்டமண்டலத்தின் ஒருபாகமாக விருந்த விஷயம் ஏற்படுகிறது. ஆனால் சிம்ஹவிஷ்ணு என்ற அரசன் காலம்வரை அதாவது ஆறுவது நூற்றுண்டின் அந்தியம் வரை பல்லவ அரசர்களது படிப்படியான வம்சாவளியை எடுத்துக் கூறப் போதுமான விஷயங்களில்லை. சிம்ஹ விஷ்ணுவின் மகன் முதலாவது மஹேந்திரவர்மன். அவன் காலத்தில்தான் தளவனூர் கற்கோவில் முதலியகோவில்கள் குடைந்தெடுக்கப்பட்டன. திருப்பாபுலியூரில் ஒருக்காலத்தில் இருந்திருந்ததாகக் கூறப்படும் சிவன் கோவிலைக் கட்டிவைத்தவன் இவனாகவிருக்கலாமெனச் சந்தேகிக்கிறார்கள். இவ்விரு ஆதி பல்லவ மன்னர்களது சிலையும் அவர்களது பட்டமஹிஷிகளுடையதுடன் மஹாபலிபுரத்தி லிருந்துவருகிறது.

இந்தத் தென் ஆற்காடு ஜில்லாவில் அதிகாரம் வாய்ந்திருந்த இன்னொரு பல்லவ அரசன் ஏழாம் நூற்றுண்டின் இறுதியிலிருந்த ராஜசிம்ஹன். அவனது காலத்தைப்பற்றிய சிலாலிகிதம் விழுப்புரம் தாலூக்காவில்

பனமலைக் கருகிலுள்ள குகைக் கோவிலில் ஏற்பட்டிருக்கிறது. ஆகலால் பல்லவ அரசர்களின் வமிசம் அதிகாரத்துடன் கூடியிருந்த காலங்களில் தென் ஆற்காடு ஜில்லா, அவர்களது தேசத்தின் பாகமாக ஏற்பட்டிருந்த தென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவர்கள் கங்க பல்லவர்களால் ஜெயிக்கப் பட்டார்கள். தென் ஆற்காடு ஜில்லாவில் கெங்கபல்லவர்கள் ஆண்டிருந்தார்கள் என்றதற்குப் போதுமான சாக்ஷிக ளிருக்கின்றன. கெங்க பல்லவர்களிடமிருந்து தென் ஆற்காடு ஜில்லா, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களின் அரசர்களாகிய சோழ வமிசத்து மன்னவர்களது ஆதீனத்தின் கீழ் வந்தது. இவ்வமிசத்தின் கடைசி அரசன் ராஜாதித்தின் என்றவன் ராஷ்டிர கூடர்களால் தோற்கடித்துக் கொல்லப் பட்டான். இந்த ராஷ்டிரகூட அரசனாகிய மூன்றாவது கிருஷ்ணராஜன் சோழநாட்டைப் படையெடுத்துக் காஞ்சிபுரத்தையும் தஞ்சாவூரையும் பிடித்துக் கொண்டான். ஆயினும் சோழமன்னர்கள், பிறகு தாங்கள் இழந்த நாடுகளைத் திரும்பவும், அடைந்து முதலாவது ராஜராஜன் காலத்தில் தென் இந்தியாவில் மேலான அதிகாரம் பெற்றிருந்தார்கள். 1070-வது வருஷத்தில் நியாயமான வார்சாக ஏற்பட்டிராத ஒருவன் அவர்களது நாட்டை ஆக்கிரமித்துப் பிடித்துக்கொண்டு அவனும் அவன் வமிசத்தினரும் பதின் மூன்றாவது நூற்றாண்டு வரை ஆண்டு வந்தார்கள். இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர்களது அதிகாரம் க்ஷீணிக்கத் தலைப்பட்டது. அப்படி அவர்களது அதிகாரம்

க்ஷீணித்தது தென்ஆற்காடு ஜில்லாவில் காணப்பட்டது போல, அவர்களது ராஜ்ஜியத்தின் எந்த பாகத்திலேயும் காணப்படவில்லை. மூன்ருவது ராஜராஜன் காலத்தில் அராஜகம் வேர் ஊன்றி அரசனை கைதியாகிக் கோப்பெருஞ்சிங்கன் என்ற ஒருவனுல் சிறை யிடப்பட்டான். பிறகு அவன் ஹாய்ஸால (Hoysala) அரசன் இரண்டாவது நரசிம்ஹன் என்பவனது சைகியத்தினுல் விடுக்கப்பட்டான். மிகத் துணிவுள்ள கோப்பெருஞ்சிங்கன் தோற்கடிக்கப்பட்ட போதிலும் அடக்கப்பட்ட வனுக ஏற்படவில்லை. 1243-வது வருஷத்தில் அவன், சிறையிலிட்டதாகக் கூறியிருக்கும் அரசன் இறந்ததும் தானே அரசனெனக் கூறிக்கொண்டு முன்னுக்கு வந்தான். அவனது தலைமை நகரம் சேந்தமங்கலம். அவனும் இறுதியில் மதுரைப் பாண்டியர்களால் ஒடுக்கப்பட்டு, அவ்வமிசத்து அரசன் முதலாவது ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் என்றவன் இந்த ஜில்லாவின் ஒரு பாகத்தை ஜெயித்துக்கொண்டான். இரண்டாவது ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் மற்றப் பாகங்களும் ஜெயித்துக் கொள்ளப்பட்டன. பிறகு கேரள அரசர்களில் ஒருவனுன குலசேகரன் என்பவன் மேற்குக் கரைப் பக்கத்திலிருந்து வந்து இந்நாட்டின் ஒரு பாகத்தை அடைந்தான். காஞ்சீபுரத்தில் அவனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. திருவதிகைக் கோவிலில் அவனது சிலாலிகிதம் ஏற்பட்டுள்ளது.

பின்னர் துவாரஸமுத்திர ஹாய்ஸாலர்கள் தென் ஆற்காடு ஜில்லாவின் ஒரு பாகத்தில் அதிகாரம் பூண்டிருந்தார்கள். அவர்களது தலைமைநகர் டெல்லியிலிருந்து படை

யெடுத்துவந்த முகமத்தியர்களால் சூறையிடப்படவே திருவண்ணுமலையை அவர்களது தலைமை நகரமாகச் செய்துகொண்டார்கள். முகம்மதியர்கள் தங்களது அதிகாரத்தைத் தெற்குநோக்கிப் பரவச் செய்துகொண்டுவந்து பதினாலாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் மதுரையிலும் கூட அதிகாரத்தை ஸ்தாபித்துத் தென்ஆற்காடு ஜில்லாவிலும் அவர்கள் அதிகாரம் வாய்ந்திருந்தார்கள்.

மேற்கூறியுள்ள முகம்மதியர்கள் மதுரையிலிருந்தும் கடைசியாகத் தென் இந்தியாவிலிருந்துமே துரத்தப் பட்டார்கள். அப்படி அவர்களைத் துரத்தியது விஜய நகர வமிசத்தினர். அவர்களது பிரதான நகரம் பெல்லாரி ஜில்லாவில் துங்கபத்திரா நதிக் கரையில் உள்ள ஹம்பி (Hampi) என்ற இடம்.

தற்காலத்து நிஜாம் ராஜியத்திலுள்ள தலிக்கோட்டை (Talikota) என்னுமிடத்தில் நடந்த பெரிய சண்டையில் 1565-வது வருஷத்தில் இந்த விஜயநகர வமிசம் தோற்கடிக்கப்பட்டு அழிவுற்றது. பீஜபூர், கோல்கொண்டா முதலிய இடங்களில் ஆண்டுகொண்டிருந்த பாமினி வமிசத்திய சுல்தான்கள் தக்ஷணத்தில் தாங்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்து, விஜயநகர வமிசத்தை பலமுள்ளதாகச் செய்துவந்தது தவறென உணர்ந்து ஒருங்கு கூடி மேற்கூறியவாறு விஜயநகர வமிசத்தை நாசப்படுத்தினார்கள். ஜெயமடைந்த பாமனி சுல்தான்கள் பெருமை நீங்கியிராததால் விஜயநகர அரசர்கள் அவர்களால் திரும்பவும் பாதிக்கப்படாது ஒன்றின்பின் ஒன்றாக முறையே பெனுகொண்டா,

சந்திரகிரி, செங்கல்பட்டு முதலிய இடங்களைத் தலைமை நகர்களாகக் கொண்டு அதிகாரம் நடத்தி வந்தார்கள். ஆதலால் அவர்கள் தலைக்கோட்டையில் தோல்வியடைந்த பிறகும் கூடத் தங்களது முந்திய ராஜ்யத்தின் சில பாகங்களில் தங்களது அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டு வந்திருந்தார்கள். 1644-வது வருஷத்தில் அவர்களில் ஒருவராகிய இரண்டாவது ரங்கன் என்றவர் கள்ளக்குறிச்சியைக் கொடையாக அளித்தார்.

தென் ஆற்காடு ஜில்லாவில் பண்டைக் காலத்திய அரசர்களில் விஜயநகர அரசர்களது துர்க்கம் எப்பொழுதுமே செஞ்சிக்கோட்டை. அதற்கு விசேஷமான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது அவர்களாலேயே. விஜயநகர அரசர்கள் தலிக்கோட்டையில் தோல்வியடைந்ததும், இந்த அதிபதி தனது அரசனுக்கு விரோதமாகக் கிளம்பினான். செஞ்சியை ஒடுக்கப் புறப்பட்டுப் போன அவ்வரசன் தனது ராஜ்யத்தை கோல்கொண்டா சுல்தான் எதிர்த்ததால் திரும்பி வந்துவிடும்படி நேர்ந்தது. அப்பொழுது நேர்ந்த சண்டையில் கொஞ்சமிருந்த தனது அதிகாரத்தையும் இழந்து அவன் மைசூருக்கு ஓடிப்போகும்படி நேர்ந்தது.

கோல்கொண்டா அரசன் தனது விஜயநகர வெற்றியைப் பூர்த்திசெய்து கொள்ள முயற்சி எடுத்துக்கொண்டான். முதல் முதல் மாகாண அதிபதிகளின் கோட்டைகளைப் பிடித்துக்கொள்ளத் தீர்மானித்துச் செஞ்சியை நோக்கிச் சென்றான். அங்கு பீஜப்பூர்ச் சைனியங்களும் அவனது உதவிக்கு வந்தன, கோல்கொண்டா அரசன் திடீ

ரென்று தனது ராஜியத்தின் ஒரு பாகத்திற்குப் போகும்படி நேர்ந்தபோதிலும் அதிர்ஷ்டவசத்தால் பீஜப்பூர் சைனியம் செஞ்சிக்கோட்டையை ஜெயித்துக்கொண்டதாம். இச்சம்பவம் நேரிட்டது 1638-வது வருஷத்தில். நாற்பது வருஷத்திற்குப் பிறகு 1677-வது வருஷத்தில் பிரசித்தி பெற்ற சிவாஜி கபடமாய் பீஜப்பூர்க் கோட்டையைப் பிடித்துக்கொண்டு சிறிதும் கருணையின்றி அந்நாட்டைக் கொள்ளையிட்டதிலிருந்து "சிவாஜியால் இந்நாடு எலும்பு வரைக்கும் உரிக்கப்பட்டது" என்று கூறப்பட்டது.

1686-வது வருஷத்தில் டெல்லி சக்கிரவர்த்தி ஔரங்கசீப் தெற்கு நோக்கி வந்து பீஜப்பூரையும், கோல்கொண்டாவையும் எதிர்த்து அடுத்த வருஷத்திற்குள் அவ்விரண்டிடங்களையும் இருந்தவிடம் தெரியாமல் செய்துவிட்டான். பிறகு அவன் கர்னாடகத்தில் பீஜப்பூரின் கீழிருந்த நாடுகளை ஜெயித்து அங்கு அதிகாரம் வாய்ந்திருந்த மஹாராஷ்டிரர்களை எதிர்க்க ஆரம்பித்தான். சிவாஜியின் மகன் ராமராஜா என்றவன் செஞ்சிக்கு ஓடிப்போக, அவ்விடம் அது தொடங்கிப் பாக்கி நின்ற மஹாராஷ்டிர சைனியம் கூடுமிடமாக ஏற்பட்டது. ஆதலால் ஔரங்கசீப் எப்படியாவது அவ்விடத்தைப் பிடித்துக் கொண்டு மஹாராஷ்டிர அதிகாரம் தலையெடுக்க முடியாதபடி அழித்துவிடத் தீர்மானித்தான். தவிரவும் தனக்கு அப் பிராந்தியத்தில் சத்துருக்களால் பிடிக்க முடியாத தலைமை நகரம் ஏற்படுத்திக்கொண்டு தெற்கில் தான் ஜெயித்த நாடுகளுக்கு அபாயத்தைத் தடுக்கும் ஸ்திரமான ஆதரவை உண்டாக்கிக்கொள்ளக் கருதினான். அதற்காக அவனால்

ஏற்படுத்தப்பட்ட ஜூல்பிகார்க் கான் (Zulfikar Khan) என்ற சேனைத் தலைவனது சதியோசனைகளால் இக்காரியம் முடிவு பெற, 1691-வது வருஷம் முதல் 1698-வது வருஷம் வரையில் ஏழு வருஷங்கள் பிடித்தன. கடைசியாக அது முகம்மதியர்கள் கைவசப்பட்டதும், அதனை ராஜதானியின் தலைமை நகராக வைத்துக்கொள்ள தேஹ ஆரோக்கியம் வாய்ந்ததாக இருக்கவில்லை யென்றறிந்து ஆற்காட்டைத் தங்களது தலைமை நகரமாக ஏற்படுத்திக் கொண்டார்கள்.

ஔரங்கசீப் தனது நாட்டை "சுபாக்கள்" என்ற பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு 'சுபா' (Subha) அல்லது மாகாணத்திற்கும் ஒரு சுபேதார் அல்லது ராஜப் பிரதிநிதியை ஏற்படுத்தியிருந்தான். இந்த சுபேதார்கள் அல்லது ராஜப் பிரதிநிதிகளின் கீழ் நவாப்புக்கள் என்ற அடுத்தபடி உத்தியோகஸ்தர்கள் ஏற்பட்டிருந்தார்கள். இப்பொழுது நாம் கவனிக்கவேண்டியவர் தக்ஷண சுபேதார் ஒருவரே. இவருக்குச் சரித்திரத்தில் நைஜாம் உல் முல்க் என்றும், அஸப் ஜா என்றும் பெயர்கள் கூறப்பட்டிருக்கும். இவர் ஔரங்கபாத்தில் வசித்துவந்தார், இவருக்குக்கீழ் ஆற்காடு நவாப் என்ற கர்நாடக நவாப் இருந்து வந்தார். மேற்கூறியுள்ள சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கையில் இந்தத் தென் ஆற்காடு ஜில்லாவில் ஐரோப்பியர்களிற் சில ஜாதியார் தங்குமிடம் பெற்றிருந்தனர். முதல் முதல் வந்தவர்கள் போர்த்துக்கேசியர்கள். அவர்கள் பரங்கிப்பேட்டை (Porto Novo) என்னுமிடத்தில் தங்குமிடம் ஏற்படுத்திக்கொண்டார்கள். பிறகு டச்சுக்

காரர்கள் பரங்கிப்பேட்டையிலும் பிறகு சில நாட்களுக்கெல்லாம் தேவனும்பட்டினத்திலும் பண்டகசாலைகள் ஏற்படுத்திக் கொண்டார்கள். பண்டகசாலைகள் ஏற்படுத்திக் கொண்ட பிறகு தேவனும்பட்டினத்தில் கடிலம் நதியின் முகத்துவாரத்தில் வடக்கில் எழுநூறு கஜ தூரத்தில் செயிண்ட் டேவிட் கோட்டை என்ற ஒரு கோட்டையும் கட்டிக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் அவ்விரு இடங்களையும் 1678-வது வருஷத்தில் விட்டுவிட்டார்கள். அப்படி அவர்கள் அவ்விடங்களை விட்டுவிட்டுப் போனதற்குக் காரணம் சிவாஜியுடன் பரங்கிப்பேட்டையில் கப்பல் சுங்கத்தைப் பற்றி அவர்களுக்கு ஏற்பட்ட வாக்குவாதம் எனக் கூறப்பட்டிருப்பதுடன் டச்சுக்காரர் தலைமை ஸ்தானமாகிய பட்டேவி யாவிலிருந்த (Batavia) டச்சு மேல்அதிகாரிகள் அவர்களது சம்பளம் முதலியவைகளைக் குறைத்ததும் ஒரு காரணமாம். காரணம் எதுவாக விருப்பினும் 1678-வது வருஷத்தில் ஒரு நாள் அவர்களது கப்பல்களில் பல அங்குவர டச்சுக்காரர்கள் தங்களது பண்டங்கள் முதலானவைகளையும் ஸ்திரீகளையும் அவைகளில் ஏற்றிப் பழவேற்காட்டிற்கு அனுப்பி விட்டார்கள். 1680-வது வருஷத்தில் அவர்கள் பரங்கிப்பேட்டைக்குத் திரும்பிவந்து மஹாராஷ்டிரர்களிடமிருந்து அங்கு கொஞ்சம் நிலம் கொடுக்கப்பெற்று, ஒரு பண்டகசாலை கட்டிக் கொள்ள அநுமதியும் கொடுக்கப் பெற்றனர்கள். இங்கிலீஷ்காரர்கள் 1690-வது வருஷத்தில் செயிண்ட டேவிட் கோட்டையை வாங்கிய காலம் வரை அவர்களிடம் தேவனும்பட்டினத்துக் கோட்டை யிருந்தது மன்றி மஞ்சக்குப்பத்தின் குத்தகை

யையும் வைத்துக் கொண்டிருந்தார்கள். 1693-வது வருஷத்தில் அவர்கள் புதுச்சேரியை பிரெஞ்சுக் காரர்களிடமிருந்து ஜெயித்துக் கொண்டு அனேக வருஷங்கள் வரை அது தங்கள் கைவிட்டுப் போகாமல் பாதுகாத்துக்கொண்டும் வந்தார்கள். தவிரவும் இந்த டச்சுக்காரர்கள் இந்த ஜில்லாவில் ஏற்பட்ட கலவர காலங்களில் எல்லாம் கொஞ்ச காலமேனும் பாக்கி பிராமல் 1825-வது வருஷம் வரை பரங்கிப்பேட்டையில் தங்குமிடம்.எதாகிலும் ஒன்று வைத்துக்கொண்டே யிருந்திருக்கிறார்கள். 1758-வது வருஷத்தில் கவுண்ட் லாலி, செண்ட் டேவிட் கோட்டையை முற்றுகை செய்த காலத்திற்குச் சற்று முந்தி அவர்களது தேவனாம் பட்டினத்துக் கோட்டை இங்கிலீஷ்காரர்களால் தரை மட்டமாக்கப்பட்டு அதற்குப் பதிலாகக் கூடலூரில் ஒரு வீடு அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இக்கட்டிடம் கீர்நந்தர் (Rev. Kiernander) என்ற பிரசித்தமான பாதிரியினால் கட்டிமுடிக்கப் பட்டதாம். டச்சுக்காரர்களது ரெசிடண்டு (Resident) ஒரு சமயம் அதில் தங்கியிருந்தனராம். அது இறுதியில் பாழடைந்து எலத்தில் விற்கப் பட்டது. போர்த்துக் கேசியர்களேயும், டச்சுக்காரர்களேயும் தவிர பிரஞ்சுக் காரர்களும், இங்கிலீஷ்காரர்களும் கூடத் தென் ஆற்காடு ஜில்லாவில் தங்கியிருந்தார்கள். இவர்களது நீடித்த போட்டியும் கொடிய எதிர்ப்பும் இந்த ஜில்லாவின் சரித்திரத்தில் அடங்கியுள்ள விஷயங்களே. 1761-வது வருஷத்தில் புதுச்சேரி பிரஞ்சுக் காரர்களால் இழக்கப் பட்டதுவரை இவர்களுள் ஏற்பட்ட ஆரவாரம் பிரபலமாக இருந்தது. 1674-வது

வருஷத்தில் பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியில் தங்க 1693-வது வருஷத்தில் அவர்கள் டச்சுக்காரர்களால் அங்கிருந்து அகற்றப்பட்டார்கள். பிறகு ஆறு வருஷங்களுக்குப் பின் பிரெஞ்சுக்காரர்கள் அவ்விடத்தைத் திரும்பவும் அடைந்து அதை விருத்தி செய்து பலப்படுத்தினார்கள். 1774-வது வருஷத்தில் அவர்களுக்கும் இங்கிலீஷ்காரர்களுக்கும் சண்டையுண்டுகொண்டபொழுது இந்த இந்திய தீபகல்பத்தின் கீழ் கரையில் அவர்களது தலைமை நகரை விடப் பலமான இடம் வேறெங்குமே இல்லை.

1639-வது வருஷத்தில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை இங்கிலீஷ்காரர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. சில வருஷங்களுக்குப் பிறகு அது தென் இந்தியாவில் இங்கிலீஷ்காரர்களது முக்கியமான ஸ்தலமாக ஏற்பட்டது. 1674-வது வருஷத்தில் அவ்விடத்திய அதிகாரிகளை முஹம்மத் கான் என்பவன் அவனிடம் வந்து போகும்படி கேட்டுக்கொண்டான். இந்த முகம்மதகான் செஞ்சியிலிருந்த அதிபதி. பிஜப்பூர் சுல்தானது பிரதிநிதியாக அதையும் அதன் கீழ்ப்பட்டிருந்த நாடுகளையும் பரிபாலித்து வந்தவன். இங்கிலீஷ்காரர்கள் அவனைச் சந்தித்ததும் அவன் அவர்களைப் பரங்கிப்பேட்டையிலாவது அதற்கருகிலாவது பண்டகசாலையையும் கோட்டையையும் கட்டிக்கொள்ளும் படிக்கும், புதுச்சேரிக் கருகிலுள்ள வழுதாவூரிலும் பண்டகசாலையையும் கோட்டையையும் கட்டிக்கொள்ளும்படிக்கும் யோசனைசொன்னான். பண்டகசாலைகளும் கோட்டைகளும் கட்டிக்கொள்ள அவ்விடங்கள் தகுதியான இடங்கள் என்று

அவர்கள் நினைத்ததால் இரண்டொரு இங்கிலீஷ்காரர்களையும் சுமார் பத்துச் சேவகர்களையும் அனுப்பி அவைகளை சுவாதீனப் படுத்திக்கொண்டு இங்கிலீஷ் கொடியை நாட்டிக்கொள்ளலாமெனப் பகர்ந்தான். ஏனெனில் பிரெஞ்சுக்காரர்களும், டச்சுக்காரர்களும் செய்த நிர்ப்பந்தத்திலிருந்து விடுவித்துக்கொள்ள அத்தகைய ஏற்பாடு அவசியமானதென்று அவன் நினைத்தான். அவனுக்கு ஒரு மரியாதையான பதிலையும் வெகுமதியையும் கம்பெனி காரியஸ்தர்கள் ஒருவர் மூலமாக அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது. தவிர அந்தக் காரியஸ்தன் தான் கூறும் நிபந்தனைகள் என்னவென்று கேட்டுத் தெரிவிப்பதுடன் மேற்கூறிய இடங்களையும் அங்குள்ள நதிகளையும் பற்றிய விவரங்களையும் எழுதி யனுப்பும்படி உத்திரவு அளிக்கப்பட்டான். இக் காரியமாக அனுப்பப்பட்டவன் எலிகு எல் (Elihu Yale) என்ற குமாஸ்தா. முப்பத்தாறு வராகன் அதாவது 126 ரூபாய் மூலதனத்தைக் கொண்டு அந்த குமாஸ்தாகாரியத்தை முடித்துக்கொண்டு வந்தான். சென்னை அதிகாரிகள் அவனது செலவை ஒத்துக்கொண்டார்கள்.

1681-வது வருஷம் வரை செஞ்சிப் பிராந்தியத்தில் தங்க யாதொரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. பிறகு கோல்கொண்டா அரசனது உத்தியோகஸ்தர்களது உபத்திரவத்தைச் சகிக்க முடியாமல் அதிகாரிகள் வேண்டியவேலைகளைச் செய்யவேண்டியது இன்றியமையாததாக ஏற்பட்டது. சென்னை கோல்கொண்டா

அரசனது நாட்டில் இருந்ததால், அவனது உத்தியோகஸ்தர்களின் கீழிருந்து கஷ்டப்பட்டார்கள். கம்பெனிக்காரர்கள் கம்பெனியின் நன்மையைக் கருதி சோல்கொண்டா அரசனது ராஜியத்திற்கு வெளியிலிருந்த செஞ்சிப்பிரதேசத்தில் பண்டகசாலை ஏற்படுத்திக்கொள்ள ஒப்பந்தம் செய்துகொள்ளத் தீர்மானித்தார்கள். பரங்கிப்பேட்டையிலிருந்த மஹாராஷ்டிர சுபேதாருக்குக் கடிதங்களுடன் ஒரு பிராமணனை அனுப்பினார்கள். அப்பொழுது மஹாராஷ்டிரர்கள் செஞ்சிக்கு அதிபதியாக இருந்தார்கள். 1681-வது வருஷம் பிப்ரவரி மாதம் அனுகூலமான பதில் வந்தது. கூடலூரில் முதல் அதிகாரியாக விருந்த ராபெர்ட்டு பிரீமன் (Robert Freeman) என்றவரை அப்பாகத்தி லுள்ள துறைகள் முதலியவைகளைப்பற்றி விசாரித்துத் தெரிவிக்கக் கேட்டுக்கொண்டார்கள். சுபேதாருடன் பேசித் தீர்மானத்திற்கு வர அவருக்கு அதிகாரமும் அளிக்கப் பட்டது. சுபேதாருக்கு அவர் மூலமாக வெகுமதிச் சாமான்களும் சில அனுப்பினார்கள்.

மேற்கூறிய ஏற்பாடு கூடலூரில் ஒரு பண்டகசாலை ஸ்தாபித்ததில் முடிந்தது. ஆனால் அது பயன் படவில்லை. அக்டோபர் மாதத்தில் கூனிமேட்டு சுபேதார் இங்லீஷ் கம்பெனியார் அவரது நாட்டில் தங்குமிடம் ஏற்படுத்திக்கொள்ள அநுகூலமும் லாபகரமுமான வாக்களித்த கூடலூரில் ஏற்படுத்திய பண்டகசாலை லாபகரமானதாக ஏற்படாததால், காரணம்பற்றி அதை ஒத்துக்கொண்டார்கள். திண்டிவனம்

ஹவில்தாரரிட மிருந்து கூனிமேட்டில் ஒரு பண்டக சாலை ஏற்படுத்திக் கொள்ள அனுப்பப் பட்டவர்கள் ஒரு ஒப்பந்தத்துடன் திரும்பினார்கள். 1683-வது வருஷத்தில் வர்த்தகர்களது சம்பந்தம் விட்டுப்போகாம லிருக்கக் கூடலூரில் திரும்பவும் பண்டகசாலை ஒன்று ஏற்பட வேண்டியது அவசியமாயிற்று. அதே காலத்தில் பரங்கிப் பேட்டையிலும் ஒரு இருப்பிடம் ஏற்படுத்திக் கொள்ளப் பட்டது. 1687-வது வருஷம் ஆகஸ்டு மாதம் செஞ்சி மஹாராஷ்டிர கவர்னரிடமிருந்து மேற்கூறியுள்ள மூன் றிடங்களின் பண்டகசாலைகளுக்கும் அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொண்டார்கள்.

1683-வது வருஷம் கூனிமேட்டு அதிகாரியும் அவரது சபையாரும் அவ்விடத்தை பந்தோபஸ்து செய்து பலப்படுத்த வேண்டியது அவசியமென்று சென்னை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க அவர்கள் சில பீரங்கிகளை அனுப்பினார்கள். அவைகளும் சரியான இடங்களில் ஏற்றி வைக்கப்பட்டன. அதே வருஷத்திய ஜூலை மாதத்தில் ஔரங்கசீப் தெற்கு நோக்கிப் போர்முகமாக வந்து கொண்டிருந்த காரணம் பற்றிக் கூடலூரிலும் பரங்கிப் பேட்டையிலு மிருந்த ஆங்கிலேயர்கள் இருப்பிடம் கூனி மேட்டிற்கு மாற்றப்பட்டது. ஏனெனில் கூனிமேடு ஒரு அரணாக ஏற்பட்டிருந்தது மன்றி பீரங்கி களாலும் பலப்படுத்தப்பட்டு அதைக் காக்க 50-போர்வீரர் களுடனும் ஏற்பட்டிருந்தார்கள்.

1690-வது வருஷத்தில் யுத்தம் ஏற்படக்கூடுமென்று பயந்த சென்னை அதிகாரிகள் செஞ்சியிலுள்ள மஹா

ராஷ்டிரத் தலைவன் ராமராஜா என்பவனுடன் பேசி இப்பொழுது செயிண்டு டேவிட் கோட்டை யிருக்கும் இடத்தில் அதாவது கூடலூருக் கருகிலுள்ள தேவனும் பட்டினத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு சிறிய கோட்டையை வாங்க முயற்சி செய்தார்கள். முன்னமே பிரெஞ்சுக் காரர்களும் டச்சுக்காரர்களும் அவ்விடத்தை வாங்கப் பிரயத்தனம் செய்திருந்தார்கள். அக்கோட்டை 500 அடிநீளமும் 400 அடி அகலமும் வாய்ந்து இரண்டு வரிசைச் சுவர்களுடன் அதிக பலம் வாய்ந்துள்ளதாக இருந்தது மன்றி அதில் அனேக கட்டிடங்களும் சௌகரி யங்களும் ஏற்பட்டிருந்தனவாம். அக்கட்டிடத்தைக் கட்டிமுடிவு செய்த சின்னையசெட்டி என்றவன் ஒரு லக்ஷம் வராகன் செலவிட்டானும். தவிரவும் அது ஏற்பட் டிருந்த இடம் ஜவுளி, ஆகாரப்பொருள்கள் முதலான வைகளில் ஏராளமான வியாபாரம் நடக்கக்கூடிய தாக இருந்ததுமன்றி சமுத்திரத்திற் கருகிலுமிருந் தது. இன்னும் அது ஒரு நல்ல நதியினுல் சூழப்பட்டிருந் தது. அதன் மணல் மேட்டில் எப்பொழுது வேண்டு மானுலும் 100 டன் பார மேற்றப்பட்ட கப்பல்கள் சாமான்கள் ஏற்றி இறக்கி அனுப்பப்பட சாதகமாக இருந்தது. அவ்விடத்தைக் கொடுக்க ராமராஜா மிகத் தகரார் செய்தான். ஆனுல் கடைசியாக இரண்டு லக்ஷம் சக்கிரம் என்ற வராகன் நாணயங்கள் அதாவது நாலு லக்ஷத்து இருபதினுயிரம் ரூபாய் கொடுத்தால் கொடுப்ப தாகச் சொன்னுன். அத்தொகையில் லக்ஷத்து ஐம்பதா யிரம் கோட்டையின் விலையாகவும், பாக்கி கீழ் அதிகாரி

களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கென்றும் ஏற்பட்டது. இங்கிலீஷ் கம்பெனியார் கோட்டைக்கு 40,000 சக்கிரமும், உத்தியோகஸ்தர்களுக்கு 10,000 சக்கிரமும் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஜூலை மாதத்தில் கூனிமேட்டு சுபேதார் மேற்கூறிய வியாபாரத்தை முடிவுசெய்யச் சென்னைக்கு அனுப்பப்பட்டார். அவர் தொகையை முதல் முதல் 1,20,000 சக்கிரமாகவும், பிறகு 1,00,000, சக்கிரமாகவும் குறைத்துப்பேசக் கம்பெனியார் தங்களது மதிப்பை 60,000 மாகச் செய்தார்கள். அத்தகைய கோட்டையை சிறியதொகையைக்கொண்டு கட்டி முடிக்க முடியாதென்றது அவர்களுக்குத் தெரியும். தவிர அது முகம்மதியர்களது வசப்பட்டு விட்டால் பிந்தி அவர்களுக்குக் கஷ்டம் நேரிடுமென்றும் அவர்கள் பயந்தார்கள். சுபேதார் அறுபதாயிரம் வராகனுக்கே ஒத்துக்கொண்டார். ஆனால் சென்னை சபையின் பிரசிடெண்டு எலிகு ஏல் (Elihu Yale) என்றவர் கடைசியில் அத்தொகையை 51,500 வராகனைக் குறைத்துக் கொடுத்ததாகவும் அதில் 40,011 கோட்டையின் கிரயத்தொகைக்கென்றும் பாக்கி மற்றச் செலவிற்கென்றும் கூறப்பட்டுளது. செயிண்ட் டேவிட் கோட்டை கிரயம் செய்யப்பட்ட பொழுது டச்சுக்காரர்களுக்கு தேவனாம்பட்டினத்தில் ஒரு பண்டகசாலையும் சில கட்டிடங்களுமிருந்தன. அவர்கள் மஞ்சக்குப்பம் என்ற கிராமத்தை மூன்று வருஷக் குத்தகைக்கு வாங்கிக்கொண்டிருந்தார்கள். கோட்டை இங்கிலீஷ்காரர்களுக்கு மாற்றப்பட்டதில் அவர்கள் வேண்டிய உதவி புரிந்தபோதிலும், எல்லைகளை நிர்ணயிக்கையில்

அவைகளுக் குள்ளிருந்த எந்த பாகமும் தங்களுக்குச் சேர்ந்ததென்று ஆக்ஷேபிக்காம லிருந்தபோதிலும், 1691-வது வருஷ ஆரம்பத்தில் மஞ்சக்குப்பத்தில் தங்களுக்கு பாத்தியதை இருக்கிறதென்றும் அங்கிருந்த பண்டகசாலையைக் கோட்டையாக மாற்றிப் போர்வீரர்களை அங்கு வைக்கப்போவதாகவும் கூறினார்கள். இந்த அநியாயமான செய்கைக்கு இடங்கொடாமலிருக்கும்படி சென்னை அதிகாரிகள் செயிண்ட டேவிட் கோட்டை அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்பினார்கள். அதனால் அவர்கள் மஹாராஷ்டிரர்களிடமிருந்து எத்தகைய நிபந்தனையின் மேல் மஞ்சக்குப்பம் குத்தகையை அடைந்திருந்தார்களோ அந்நிபந்தனையை ஒப்புக்கொள்ளும்படிக்கும் கூறியிருந்தார்கள். டச்சுக்காரர்கள் இணங்கி வராததால் இங்கிலீஷ்காரர்கள் மஞ்சக்குப்பத்தைப் பிடுங்கிக் கொண்டார்கள். டச்சுக்காரர்கள் தங்களுக்குப் போதுமான சைனியம் வந்ததும், அதைத் திரும்பவும் பிடித்துக்கொண்டு விடுவதாக பயமுறுத்தினார்கள். அதனால் இங்கிலீஷ்காரர்கள் மஞ்சக்குப்பத்தில் தங்கள் தேசத்துக் கொடியை நாட்டிப் பாராப் போட்டு ராணுவத்தைக் கொண்டு வேண்டுமானாலும் அதைக் காக்க ஏற்பாடுசெய்து கொண்டார்கள்.

1698-வது வருஷத்தில் முகமதியர்கள் செஞ்சியைப் பிடித்துக் கொண்ட பிறகு கூடலூரை இரு முறை எதிர்த்தார்கள். முதல் முதல் வெற்றி அவர்கள் பக்கம் ஏற்பட்டபோதிலும் இறுதியில் தோற்கடிக்கப்பட்டார்கள். மேற்கூறிய சம்பவத்தினால் இங்கிலீஷ்காரர்கள் 8000

வராகன் செலவுசெய்து கர்னடக நவாப்பி னிடமிருந்து மேற்கூறிய கோட்டையின் ஸ்வதந்திரத்தைப் பற்றிய நிரூபத்தைப் பெற்றார்கள். பிறகு இவர்கள் 1710-வது வருஷத்தில் சூல்பிர்கான் என்றவன் செஞ்சி கவர்னராக நியமித்திருந்த சொரூப்சிங்கு என்ற ராஜபுத்திரனுடன் தகரார் செய்ய நேர்ந்தது. செஞ்சி நாட்டில் சிலர் வரிகொடாமல் ஓடிப்போனதற்கு இங்கிலிஷ்காரர்கள்தான் காரணம் என அவன் கூறினன். ஏனெனில் மூந்திய செயின்ட் டேவிட் கோட்டை டெப்டி கவர்னர் ஒருவர் எக்காரணம் பற்றியோ செஞ்சிநாட்டில் வரிகட்டுபவர்கள் கொடாவிடில் தான் பாத்தியம் என்று ஏற்பாடு செய்திருந்தான். தகரார் பலப்பட்டு, நீடித்த சண்டைக்குப் பிறகு 1712-வது வருஷத்தில் பிரஞ்சுக்காரர்களது மத்திய ஸ்தலத்தின்மேல் சொரூப் சிங் என்றவனுக்கு நஷ்டம் ஈடேற்றிக் கொடுத்துக் கம்பெனிக்காரர்கள் ராஜிசெய்து கொண்டார்கள்.

1740-வது வருஷத்தில் இவர்கள் மஹாராஷ்டிரர்களுடன் போராட நேர்ந்தது. 1744-வது வருஷத்தில் இவர்கள் ஐரோப்பாவில் பிரெஞ்சுக்காரர்களுடன் போராடும்படி நேர்ந்தது. 1746-வது வருஷத்தில் செயிண்டு டேவிட் கோட்டை இங்கிலீஷ்காரர்களது தலைமை நகரமாக ஏற்பட்டது.

மேற்கூறிய இரண்டு வைரிகளுடன் வெகுகாலம் போராடிக் கடைசியாகக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தங்களது அதிகாரத்தை இங்கிலீஷ் கம்பெனிக்காரர்கள்

இந்த ஜில்லாவில் ஸ்திரமாக ஏற்படுத்திக் கொண்டார்கள். பூர்த்தியாக இங்கிலீஷ்காரர்களுக்கு இத் தென் ஆற்காடு ஜில்லா கைவச மானது. 1801-வருஷத்தில் அப்பொழுதைய நவாப் அஸிம் உத்தௌலா (Azim-ud-Daulah) தான் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்த முடியாததின் நிமித்தமாக செய்துகொண்ட உடன்படிக்கையே. இது முதல் யாதொரு தொல்லையு மின்றி ஆங்கிலேயர்கள் இந்த ஜில்லாவை ஆண்டு வருகிறார்கள்.

# அத்தியாயம் 2

## முக்கிய இடங்கள்

கூடலூர் (Cuddalore):—இந்தத் தாலூக்கா இந்த ஜில்லாவின் சமுத்திரக் கரையின் மத்தியில் இருக்கிறது. இதின் பெரும்பாகம் பெண்ணையாறு, கடிலம், வெள்ளாறு நதிகளின் வண்டல்படிந்துள்ளது. சிதம்பரத்திற்குத் தெற்கில் அடுத்த முக்கிய நகரம் இது. ஆனால் இதில் சுமார் ஐம்பதினாயிரம் ஜனத்தொகைக்கு அதிகமாகவே உள்ள ஒரு பெரிய ஊரும், பதினாயிரம் ஜனத்தொகைக்கு மேலே உள்ள பண்ணுருட்டி, நெல்லிக்குப்பம் என்ற இரண்டு ஊர்களுமிருக்கின்றன. தென் ஆற்காடு ஜில்லாவிலேயே அதிக ஜனநெருக்கமுள்ளது கூடலூர்த்தாலூக்கா. இதில் சதுரமைலுக்கு 800 ஜனங்களிருப்பதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. ஜனங்களின் படிப்பு விருத்தியிலோ இதைச் சிதம்பரத்திற்கு அடுத்த படியாகக் கொள்ளலாம். இந்தத் தாலூக்காவில் முகம்மதியர்களது தொகை அதிகம். கடலோர வாசிகளாக ஏற்பட்டிருக்கும் லப்பைகளும் மரக்காயர்களும் ஜனத்தொகையின் சங்கியையை அதிகரிக்கச் செய்திருக்கிறார்கள். இந்தத் தாலூக்காவின் பெரும் பாகத்தில் பஞ்சம் ஏற்படுவதில்லை. சிதம்பரம் தாலூக்காவைத் தவிர எந்தத் தாலூக்காவை எடுத்துக் கொண்டாலும் அதில் பொழியும் மழைக்குக் குறைவில்லை. தவிர திருக்கோவிலூர், சாந்தியாத் தோப்பு அணைக்கட்டுகளின் நன்மையும், கடிலம் நதிக்குக் குறுக்காக இந்த ஜில்லாவில் ஏற்பட்டிருக்

கும் மூன்று அணைக்கட்டுகளின் நன்மையும் இதற்கு ஏற்பட்டிருக்கிறது. கடைசியாகக் கூறியுள்ள அணைகளி னால் ஏற்பட்டிருக்கும் கால்வாய்கள் பாயும் பிராந்தியம் தென் ஆற்காடு ஜில்லாவிலேயே மிகச் செழுமை வாய்ந்தது. மேற்கிலுள்ள உயர்ந்த செம்மண்பூமி செழுமையற்று நன்கு விளையாத பாகம். முக்கியமான விளைபொருள்கள் நெல் லும், வேர்க்கடலையுமே. முக்கியமான கைத்தொழில்கள் நெசவும், உப்புத் தொழிலுமே. வியாபார மத்தியஸ்தலங் கள் இந்த ஜில்லாவின் முக்கிய துறைமுகப் பட்டினமாகிய கூடலூரும் அனேக விவசாயப் பொருள்களிலும் முக்கிய மாய் வேர்க்கடலையிலும் வியாபாரம் செய்யும் பண்ணு-ருட்டியும்.

இந்தத் தாலூக்கா, ஜில்லா இரண்டிற்குமே தலைமை ஸ்தானமாகிய ஊர் கூடலூர். இது விருத்தி யாகிக் கொண்டுவரும் ஒரு முனிஸிபாலிட்டி. ஐம்பதா-யிரம் ஜனங்களுக் கதிகமாகவே இருப்பதாக இந்த ஊரின் ஜனத்தொகை கணக்கிடப்பட்டிருக்கிறது. வியாபாரத்திற் கும், படிப்பிற்கும் மத்திய ஸ்தானமாக உள்ளது இது. இந்நகருக்குக் கூடலூர் என்ற பெயர் ஏற்பட்டதற்குக் கார ணம் கடிலம், உப்பனாறு நதிகள் இங்கு கூடுவதாலெனக் கூறுகின்றனர். கூடலூர் புதிய பட்டணம், பழையபட்டணம் இரண்டு இடங்களிலும் ரயில் ஸ்டேஷன்கள் உண்டு. சென்-னைக்கு 125-மைல் தூரத்தில் உள்ளது புதியகூடலூரிலுள்ள ஸ்டேஷன். இதற்கு வடக்கில் பெண்ணையாறு ஓடு கிறது. இதைக் கடப்பதற்கும் ஓர் பால மிருந்தது. அது 1884-வது வருஷத்திய வெள்ளத்தில் அடித்துக்

கொண்டு போகப்பட்டு 1888-வது வருஷம் ஏப்பிரல் மாதத்திற்கும் 1891-வது வருஷம் பிப்பிரவரி மாதத்திற்கும் இடையில் மறுபடியும் கட்டிமுடிக்கப் பட்டது.

இந்த முனிஸிபாலிட்டியில் வியாபார ஸ்தலமாகிய பழைய கூடலூர் கடிலம் உப்பனாறு நதிகளின் முகத்துவாரங்கள் சேருமிடத்துக் கடற் கழிவில் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு வடக்காக ஏற்பட்டுக் கடலிலிருந்து ஒரு மணற்பாங்கான பூமியினால் பிரிக்கப்பட்டிருக்க அம்மணல்பிரதேசத்தில் மீன் பிடிப்பவர்கள் வாழும் கிராமங்களாகிய சிங்காரத்தோப்பும், கோரியும் இருப்பதுடன் தீபஸ்தம்பமும் ஏற்பட்டிருக்கிறது.

கூடலூரில் முன் ஏற்பட்டிருந்த பிரசித்திபெற்ற (Fort St. David) செயின்ட் டேவிட் கோட்டை கொத்தளங்களெல்லாம் 1803-வது வருஷத்தில் இடித்து விடப்பட்டன. இப்பொழுது அங்கிருப்பதெல்லாம் பாரிகம்பெனியார் அநுபவத்திலுள்ள பழைய பண்டகசாலை ஒன்றே.

திருப்பாபுலியூரென்ற கூடலூர் புதிய பட்டணத்தில் இருக்கும் கோவில் பாடல்பெற்ற பெரிய கோவில். இதற்குத் தேவாரம் உண்டு. அதில் இது திருப்பாதிரிப்-புலியூரென்று கூறப்பட்டிருக்கிறது. இங்கு சோழ அரசர்கள் காலத்திய சிலாலிகிதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்பர் சுவாமிகள் காலத்தில் இவ்விடத்திலுள்ள ஜயினக் கோயிலை இடித்துத் திருவதிகை என்னுமிடத்தில் முதலாவது மஹேந்திர வர்மன் தனது பட்டப் பெயர்களிலொன்றால் "குணபதீச்சரம்" என்னும் கோயிலைக் கட்டி வைத்தனராம்.

உத்தியோகஸ்தர்கள் வசிக்கும் மத்தியஸ்தலம் மஞ்சக்குப்பம். இதன் மத்தியில் ஒரு நேர்த்தியான மைதானம் ஏற்பட்டிருக்கிறது. இதைச் சுற்றிலும், இரு பக்கங்களிலும் மரங்கள் வளர்ந்துள்ள ரஸ்தாக்கள் இருக்கின்றன. இதன் மத்தியில் 1809-ம் வருஷக் குறியுள்ள ஒரு பீரங்கி வைக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறியுள்ள மைதானத்தைச் சுற்றித் தான் இந்த ஜில்லாவின் முக்கியமான சர்க்கார் கட்டிடங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மஞ்சக்குப்பத்தில் முன் இரண்டு கல்லூரிகள் இருந்தன. ஒன்று ரோமன் கத்தோலிக் பாதிரிமார்களாலும் மற்றது இந்துக்களாலும் நடத்தப்பட்டு வந்தது. ஆனல் கொஞ்ச காலத்திற்குமுன் அவைகள் உயர்தரக்கலாசாலைகளாக மாறி விட்டன. கூடலூரில் உபாத்திமார்கள் பழக்கப்படும் ஒரு டிரெயினிங் பாடசாலை (Training School) சர்க்காரால் வைத்து நடத்தப்பட்டு வருகிறது. உபாத்தினிமார்கள் பழக்கப்படும் கலாசாலை ஒன்று ரோமன் காதலிக் பாதிரிகளால் நடத்தப்பட்டு வருகிறது.

சிதம்பரம் (Chidambaram):—இது ஆதிகாலத்தில் சோழ மன்னர்களது ராஜதானி நகரமாக ஏற்பட்டிருந்தது. தற்காலம் அவ்விஷயத்தைப்பற்றிய யாதொரு அறிகுறியும் ஏற்பட்டிராவிடினும் ரயில் ஸ்டேஷனுக்கருகிலுள்ள கொற்றவன்குடி என்ற ஊரின் பெயர் அரசர்களது வாஸஸ்தலம் அங்கு ஏற்பட்டிருந்ததெனக் காட்டுகிறது. தவிரவும், கொஞ்ச காலத்திற்கு முன் சில மேட்டுப் பிரதேசங்களை வெட்டிப் பார்த்தபொழுது கற்சிலைகள்

முதலியன அகப்பட்டன. ஆதியில் சோழ மன்னர்கள் ஸ்ரீ நடராஜர் சந்நிதானத்துப் "பஞ்சாக்ஷரப் படி"யில் முடிசூட்டப் பெற்று வந்த விஷயம் புராணங்களிலிருந்து தெரிகிறது.


மகம்மதியர் கலக காலத்தில் நடராஜ விக்ரஹத்தை எடுத்துக்கொண்டு தீக்ஷிதர்கள் மேற்குத் தேசம் போய் ஓரூரில் ஒரு பெரிய புளிய மரத்தடியில் பூமியில் புதைத்து வைத்து வந்தனர். பின்னர் கலகம் நீங்கியதும் அங்கே போய்த் தேடுகையில், புதைத்து வைத்த இடம் தெரியாமல் திகைத்து நிற்கையில், அவ்விடத்தில் ஏருழவர்கள் தங்கள் வேலைமுடிந்த பின்னர் காளைகளை அவிழ்த்துவிடும் பொழுது 'அம்பலப் புளியடி' யில் நிறுத்துவ தென்று பேசிக்கொண்டதிலிருந்து,ஸ்தலத்தைத்தெரிந்து கொண்டு நடராஜ ரடங்கிய பெட்டியை எடுத்துவந்தார்கள். இப் பொழுதும் இந்தப் பெட்டியைக் கோயிலில் வைத்துக் காப்பாற்றி வருகிறார்கள். இவ்விஷயத்தைச் சோழமண்டல சதகம் பின்வருமாறு கூறுகிறது:—

"தெளிவந் தயன்மா லறியாத
தில்லைப் பதியம் பலவாணர்
புளியம் பொந்தி னிடம்வாழும்
புதுமைகாட்டிப் பொருள்காட்டி
யெளிதிற் புளியங் குடியா னென்
றிசைக்கும் பெருமை யேருழவர்
வளருங் குடியிற் பொலிவாழ்வு வளஞ்சேர்
சோழ மண்டலமே"

கோப்பெருஞ் சிங்கதேவரென்ற பல்லவ அரசன் "சோக்கச்சியன்" எனப்பட்டிருந்த தெற்குக் கோபுரத்தை ஏழு அந்தஸ்துகளுடன் கட்டிவைக்குமாறு சென்னைக்குச் சமீபத்திலிருக்கும் ஆத்தூர் என்னும் கிராமத்தை தானமாகக் கொடுத்ததாகக் கூறியுளர். அவரது சிப்பந்தி சோழக்கோன் என்றவர் கிழக்குக் கோபுரத்திலுள்ள அரிகால்களை ஏற்படுத்தினராம். விசேஷமான பரதநாட்டிய பொம்மைகள் ஏற்பட்டிருப்பது இக்கோபுரத்தில்தான்.

இக்கோவிலின் (படம் 2) பிரகாரங்களுக்கு விக்கிரம சோழன் திருமதில், குலோத்துங்கசோழன் திருமதில் என்ற பெயர்கள் ஏற்பட்டிருத்தல், விக்கிரம சோழனும், குலோத்துங்க சோழனும் அவைகளைக் கட்டிவைத்திருக்க வேண்டுமென்பதைக் காட்டுகிறது. முதலாவது சுந்தரபாண்டியன் இக்கோவிலில் "துலாபார தானம்" செய்து அப்பொருளைக்கொண்டு ஸ்ரீநடராஜரது விமானத்தின் செப்போடுகளுக்குத் தங்கமுலாம் பூசி வைத்தனர். தவிரவும் அவர் ஊரின் மேற்கில் ஒரு அக்கிரஹாரம் ஏற்படுத்தி அதில் 180 பிராம்ஹணர்கள் வசித்துவரும்படி செய்தனர். கோவிலின் வடக்குக் கோபுரம் விஜயநகர கிருஷ்ண தேவராயரால் கட்டிவைக்கப்பட்டது. அவரது சிலை ஒரு பெரையில் வைக்கப்பட்டுளது. இவ்வூரின் மேன்மைக்குக் காரணம் இங்குள்ள கோவிலே.

மேலேகூறிய நடராஜர் கோவிலுக்குள் விசேஷபாடல் பெற்ற ஒருவிஷ்ணு கோவிலுமிருக்கிறது. இதற்கு வைஷ்ணவ புராணங்களில் 'சித்திர கூட' மெனப் பெயர். தென் இந்தியாவிலேயே புராதனமான பெரிய கோவில்களுள்



(படம் 2)—சிதம்பரம் கோவில்,


ஒன்று சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோவில், ஆனது பற்றியே சைவநூல்களில் 'கோயில்' என்று இதற்குப் பெயர். இது 39 ஏகரா விஸ்தீரணமுள்ள தென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இக்கோவிலைக் கட்டிமுடிக்கக் கற்கள் கொண்டுவந்த விஷயம் அதிக வியப்பானது. அதிக சமீபத்தில் கற்கள் கிடைக்கக்கூடிய இடம் நாற்பது மைல் தூரத்திற் கப்பால் வெள்ளாற்றிற்கு அக்கரைப் பக்கமாக விருக்கிறது. அங்கிருந்துதான் இக்கோவில் கட்டவேண்டிய கற்கள் கொண்டுவரப் பட்டிருக்கவேண்டும். ஆனால் அக்காலத்தில் நல்ல பாதைகளே ஏற்பட்டிராது, வண்டிகள் முதலானவைகளும் பழைய காலத்திய வைகளாக இருந்திருக்க வேண்டும்.

கோவில் இரு பிராகாரங்களுடன் கூடியுள்ளது. பிராகாரங்களிற்கு வெளியில் நாற்ப தடி அகலமுள்ள தேர் ஓடும் வீதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் ஒரு கோட்டையின் அகழ்களாக விருந்த இடங்களே இப்பொழுது அத்தகைய வீதிகளாக ஏற்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு மதில் சுவர்களிலும் வாயிற் படிகள் நான்கு திசைகளிலும் ஏற்பட்டிருக்கின்றன. முதல் பிராகாரச் சுவரின் மேலுள்ள வாயிற்படிகளில் தான் நாலு திசைகளிலும் உன்னதமான கோபுரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இக்கோபுரங்களின் அடிப்பாகம் கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டது. மேல் பாகங்கள் செங்கல்கள்கொண்டமைக்கப்பட்டுள்ளன. கோபுரங்களில், புராண சம்பவங்களைக் குறிக்கும் பிம்பங்கள் காரையினால் செய்யப்பட்டுவர்ணங்கள் பூசித் துலங்கி நிற்கக் காணலாம்.

தெற்குக் கோபுர வாயிலின் வழியாக உள்ளேவந்த தும் தென்படுவது செங்கற்களால் செய்து காரை பூசி வைக்கப்பட்டுள்ள ஒரு பெரிய நந்தி. இதற்கு மேற்கில் முக்குறுணி அரிசிப் பிள்ளையார் கோவில் உள்ளது. இன்னும் வடக்கில் மேலண்டைப் பிராகாரச் சுவரின் சமீபமாகப் பார்வதி அம்மன் கோவில் ஏற்பட்டிருக்கிறது. இக்கோவிலின் படிகளிலிருந்து பார்த்தால் பிராகாரங் களிற் குள்ளிருக்கும் பற்பல கட்டிடங்கள் தெளிவாய்க் காணப்படும். இதன் கிழக்கில் "சிவகங்கை" என்ற குளமும் அதற்கப்பால் ஆயிரக்கால் மண்டபமும் 340-அடி நீளமும் 180-அடி அகலமும் வாய்ந்துள்ளன. இதற்கு 'ராஜசபை' என்ற ஐந்து சபைகளில் ஓர் பெயரும் உண்டு. பாக்கி நான்கு சபைகளில் 'தேவசபை' என்றதில் தீக்ஷிதர்கள் கூடிக் கோயில் வியவகாரங்களை நிர்ணயிப்பார்கள். "சித்சபை" என்றதில் தான் ஸ்ரீநடராஜர் விக்ரகமும் 'ரகசிய' மெனப்படும் யந்திரமும் வைக்கப்பட்டிருக்கின்றன. கனகசபை என்றது இதற் கெதிரிலுள்ள மண்டபம். "நிருத்த சபை" தான் ஊர்த்துவதாண்டவ மூர்த்தியுள்ளசபை. இச்சபையின் அடிவரிகளில் அற்புதமான நடனபிம்பங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. நந்தனும் மாணிக்கவாசகரும் முக்திபெற்ற ஸ்தலம் இதுவே.

தவிர, இது தாலுக்காத் தலைமை யிடமாக ஏற்பட்டிருப்பதுடன் ஜில்லா முனிசீப் கோர்ட்டும், ரயில் ஸ்டேஷனும், பிரயாணிகள் தங்கும் பங்களாவும் இருக்கின்றன. மேற்கூறிய பங்களா தெற்கில் ஒரு மைல் தூரத்திலுள்ள அம்மாபேட்டையி லிருக்கிறது.

1920-வது வருஷம் ஜூன் மாதம் 24-ம்தேதி இவ்வூரில் ஒரு உயர்தரக் கல்லூரி (படம் 3) ஏற்பட்டது. மாணவர்கள் சாப்பிட ஒரு விடுதியும், ஒரு புத்தகசாலையும், ஆஸ்பத்திரியும் இக்கல்லூரியைச் சேர்ந்திருக்கின்றன. மேற்கூறிய கல்லூரியைத் தவிர நாவலர் தமிழ்க் கல்லூரி யென்ற இன்னொரு கல்லூரியும் இங்கு ஏற்பட்டிருக்கிறது. இது 1864-வது வருஷத்தில் ஆறுமுகநாவலர் என்ற யாழ்ப்



(படம் 3)—மீனாட்சி கல்லூரி.

பாணத்துப் பெரியாரால் ஸ்தாபிக்கப்பட்டது. மேல்வீதியில் இது ஒரு சொந்தமான கட்டிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. இது சென்னை யூனிவர்ஸிடிக்குச் சேர்க்கப்பட்டு முக்கியமாய்த் தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் மாணவர்கள் பரீக்ஷைசெய்து வித்துவான் பட்டம் அளிக்கப்பட்டு வருகிறார்கள். தவிர இக்கல்லூரியில் உயர்தரத் தமிழ், சமஸ்கிருதப் படிப்பும், சைவ சமய போதனையும் தேவாரப் படிப்பும் அளிக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறியவற்றைத் தவிர இவ்வூரில் இன்னொரு சமஸ்கிருத

பாடசாலையும் பச்சையப்ப முதலியாரது உயர்தரக் கலாசாலை ஒன்றும் ஏற்பட்டிருக்கின்றன.

ஸ்ரீமுஷ்ணம் (Srimushnam) :—சிதம்பரத்திற்கு மேற்கில் 24-மைல் தூரத்திலுள்ள இது 'திருமுட்ட'மென்றும் அழைக்கப் படுவதுண்டு. இங்குள்ள கோவிலின் திருமதிலை 1582-வது வருஷத்தில் இரண்டாவது ரங்கராயர் காலத்தில் கொண்டம நாயக்கர் என்ற அவரது உத்தியோகஸ்தர் ஒருவர் கட்டிவைத்தனராம். அச்சுத நாயக்கர் என்ற இன்னொருவர் இக்கோவிலின் அம்மன் (தாயார்) சன்னதியைக் கட்டிவைத்ததாகக் கூறப்பட்டுளது. சில நாயக்க அரசர்களது சிலைகள் இக்கோவிலில் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு சிலாசாசன லிகிதங்கள் ஏற்பட்டிருப்பதிலிருந்து வராக புராணத்திலுள்ள "ஸ்ரீ முஷ்ண மஹாத்மியம்" மாதப்பிறப்பு தினங்களில் வாசிக்கப்பட வேண்டும் என்று தெரிகிறது. தவிர எந்தெந்தக் காலங்களில் எந்தெந்த வாகனங்களில் சுவாமியை எழுந்தருளச் செய்ய வேண்டுமென்றதும், எவ்வெப்பொழுது என்ன என்ன பிரசாதங்கள் சுவாமிக்கு நிவேதனம் செய்விக்க வேண்டுமென்றவிவரங்களும் அச்சிலா லிகித சாஸனத்தில் ஏற்பட்டிருக்கின்றன. விரிசடை ராமரென்ற ஒருவர் ஒருக்கால் 18 மாதகாலம் ஒரு காட்டில் ஒரு குளத்தின் கரையிலிருந்து தவம் செய்து பின்னர் இங்குள்ள ஆதிவராகரை ஆலிங்கனம் செய்து கொண்டு வரத்தைக் கோரினராம். வரங்கொடாவிடில் தான் தீக்குளிப்பதாகத் தீர்மானித்த அவர்மீது கருணைகொண்டு பகவான் அவரது மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வைத்தார் என்ற ஓர் ஐதீகக்

கதையும் ஏற்பட்டுளது. இக்கோயில் தஞ்சை மாநகரை யாண்ட அச்சுத நாயக்கர் முதலியவர்களது சிலைகளும், புராணசம்பந்தமான சரித்திரங்களும் சிலா ரூபமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன.

கோவிலினால் பெயர்பெற்ற இவ்வூர் சிதம்பரத்திற்கு 19 மைல் தூரத்தில் தாலூக்காவின் வடமேற்குக் கோடியில் ஏற்பட்டுள்ளது. மஹாவிஷ்ணு வராகவதாரமெடுத்து பூமியை ஹிரணியாக்ஷனிடமிருந்து திரும்பவும் பிடுங்கிக் கொண்டுவந்த ஐதீக சம்பந்தமாக ஏற்பட்ட கோவிலே இங்குள்ள கோவில். சிரமபரிகாரம் செய்துகொள்ளத் தங்கினபொழுது அவர் தேகத்திலிருந்தும் சொரிந்த வியர்வையே இங்குள்ள நித்திய புஷ்கரிணி யென்ற கோவிற் குளமாக ஏற்பட்டதெனக் கூறுகிறார்கள்! இக்குளத்தில் ஸ்நானம் செய்தால் இந்தியாவிலுள்ள எல்லாப்புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலன் கிடைக்குமாம். இக்கோவிலின் முக்கிய உற்சவம் பிரதிவருஷமும் தை அல்லது மாசி மாதத்தில் நடைபெறுவது வழக்கம். அப்பொழுது விக்கிரகம் பரங்கிப்பேட்டைக்குத் தெற்கில் கொஞ்சதூரத்தில் சமுத்திரக் கரையிலுள்ள கிள்ளை என்ற ஊருக்குக் கொண்டுபோகப்பட்டு சமுத்திரத்தில் கடவுள் தீர்த்தம் கொடுப்பதாக உற்சவம் கொண்டாடப் படுவதுண்டு.

திருக்கோவிலூர் (Tirukovilur):—அழகான பெண்ணையாற்றங் கரையிலுள்ள இவ்வூருக்கு "மதுராந்தகசதுர்வேதி மங்கல" மென்ற இன்னொரு பெயரு முண்டு. இவ்வூரில்முக்கிய சிவன் விஷ்ணு கோவில்கள் இருந்து வருகின்

றன. இவ்வூர் திருவிடைக்கழி ஆழ்வார் என்ற திருவிக்கிரப் பெருமாள் கோவிலின் கர்ப்பகிரஹம் செங்கற்கள் கொண்டு கட்டப்பட்டிருந்தது ஜீரணமாய்ப்போனதினிமித்தம், ரண கேஸரிராமனென்ற நரசிம்மவர்மன் என்றவன் அதை இடித்து அதையும் அதை ஒட்டியிருந்த மண்டபத்தையும் கருங்கற்கள் கொண்டு கட்டிவைத்தான். அந்த கர்ப்ப கிருஹத்திற்கு அவனால் ஐந்து ஸ்தூபிகளும் ஏற்படுத்தி வைக்கப்பட்டதைத் தவிர, அக்காலத்தில் ஏற்பட்டிருந்த சிலாலிகித சாசனங்களை மதில்சுவர்களில் திரும்பவும் வெட்டி வைக்கவும் ஏற்பாடு செய்தனன். இந்த நரசிம்ம வர்மன் தான் அக்காலத்தில் மிலாடெனவழங்கி வந்த இந்நாட்டை ஆண்டு வந்தவன். பிறகு 1470-வது வருஷத்தில் சாளுவ நரஸிம்மன் காலத்தில் இக்கோவிலின் திருமதிலும் கோபுரமும் கட்டிமுடித்து வைக்கப்பட்டன. இவ்விடத்தில் தான் முதல் ஆழ்வார்களான கச்சிப் பொய்கையார், மல்லை பூதத்தார், மயிலைப் பேயாழ்வார் முதலானோர் ஒரே காலத்தில் சந்தித்துப் பிரபந்தம் பாடும்படி ஏற்பட்டது. இவ்விஷயம் விஜயநகர சதாசிவ ராயர் சிலாலிகித சாஸனங்களில்கூட ஏற்பட்டுளது. அக்காலத்தில் மூலவிக்ரகமும், துவாரபாலகர்களும் மரத்தினால் ஏற்பட்டிருந்தனவாம். இவ்வூர் சேதிநாட்டைச் சேர்ந்திருந்த ஆதிகாலத்தில் மெய்ப்பொருள் நாயனார் ராஜதானியாக வைத்திருந்தார்.

விருத்தாசலம் (Vriddachalam):—இது மணிமுத்தா நதிக்கரையில் கூடலூருக்கு மேற்கே தென்மேற்கில் சுமார் 38 மைல் தூரத்திலிருக்கிறது. இது இந்தக்

தாலுக்கா தாசில்தாரரது இருப்பிடமாக விருப்பது மன்றி ஜில்லா முனிசீப்பின் இருப்பிடமாகவும் ஏற்பட்டிருக்கிறது. தவிரவும் இங்கு ஒரு சப்ரிஜிஸ்திரார் ஆபீசும் போலீஸ் ஸ்டேஷனும் பிரயாணிகள் தங்கும் பங்களாவும் இருக்கின்றன. இவ்வூர் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு நதிக்குத் தென்பக்கமாகக் கோவிலைச் சுற்றியுள்ள பாகம் பழைய ஊர் என்றும் எதிர்கரையிலுள்ள பிரயாணிகள் தங்குமிடம் ஏற்பட்டுள்ள பாகம் புதுப் பேட்டையென்றும் பெயரிடப் பெற்றிருக்கின்றன. 1873-வது வருஷத்தில் 52,700 ரூபாய் செலவிட்டுக் கட்டப்பட்ட ஒரு பாலம் இவ்விரண்டு ஊர்களையும் சேர்க்கிறது. புதுப்பேட்டையின் பாகங்கள் தாழ்ந்திருப்பதுடன் சுகவீனமான ஸ்தானங்களாதலால் ஜனங்கள் அங்கு வசிப்பதில்லை. இப் புதுப்பேட்டை ஏற்பட்டதற்கே காரணம் தென்ஆற்காடு ஜில்லா கோர்ட்டு விருத்தாசலத்தில் முதல்முதல் ஏற்படுத்தப்பட்டதனால் தான். 1821-வது வருஷத்தில் அந்தக்கோர்ட்டும் அங்கிருந்தெடுக்கப் பட்டது.

இவ்வூர் விருத்தகிரீசுவரர் கோவில் இருப்பது ஆற்றின் அக்கரையில். அக்கோவில் தமிழில் பழமலைநாதர் கோவிலெனவும் வழங்கப்படுகிறது. வடமொழியில் விருத்தாசல மென்றால் பழய மலையென்று பொருள். இப்பெயர் வந்ததற் கொரு புராணக் கதையு முளது. ஜகத் சிருஷ்டிக்குமுன் மஹா விஷ்ணுவின் இரு காதுகளிலிருந்தும் இரண்டு அரக்கர்கள் வெளிப்பட்டார்களாம். அவர்கள் விஷ்ணுவை வென்று அவர் கேட்டவரத்தைக் கொடுட்

பதாகக் கூற அவர் அவர்கள் தன்னால் கொல்லப்பட வேண்டுமென்ற வரத்தைக்கேட்டுப் பெற்று அவர்களைக் கொன்று எறிய அவர்களது சரீரங்கள் பரமசிவனால் பூமி யாக மாற்றப்பட்டு பிரம்மாண்டமாய் வளர்ந்து ஆகா யத்தை அளாவி நிற்க பிரம்மாவினால் சிருஷ்டித்த மலைகளுக் கிடமில்லாமற் போயிற்றாம். ஆதலால் பரம சிவன் பிரம்மாவின் வேண்டுகோளின்மேல் அதைபூமியில் அமிழ்ந்துபோகும்படி செய்தனராம். முதல் முதல் ஏற் பட்டு மலைபோல் நின்ற காரணம்பற்றி விருத்தகிரியென்ற பெயர் வந்து, அது அமிழ்ந்திருக்கும் இடமாகிய இவ்வூரும் அப்பெரையே பூண்டுளதாம். இங்கு இரண்டு அம்மன் கோவில்கள் விருத்தாம்பாள் கோவில் பாலாம்பாள் கோ வில் என்ற பெயர்களுட னிருக்கின்றன. மேற்கூறிய பா லாம்பாள் ஸ்தாபிக்கப்பட்டதற்கு ஒரு புராணக்கதைபு முண்டு. ஒருக்கால் சுந்தரர் இந்த இடத்திற்கு வந்து அங்கு மலையென்ன, ஊர் என்ன, சுவாமி யென்ன, அம் மன் என்ன ஒவ்வொன்றும் பழைமையாயிருந்தனால் அதிருப்தியடைந்து மற்ற இடங்களிற் செய்து வந்தது போல் போற்றிப் பாடாமல் புறப்பட்டுப்போனார். வழியில் பகவான் ஒரு வேடன் உருவங் கொண்டு வந்து அவரிட மிருந்ததை யெல்லாம் கொள்ளை கொண்டுபோய்விட அவர்திரும்பியும் விருத்தாசலத்திற்கே வர நேர்ந்தது. அங்கு கடவுள் அருளால் ஒரு பாலாம்-பிகை ஸ்தாபிக்க ஏற்பாடு ஏற்பட்டிருந்ததைக் கண்டதும் தான் செய்ததற்கு விசனப்பட்டு அவ்விடத்தையும் அதன் கடவுளையும் துதித்துப் பாடினராம்.

இந்த ஊர்க் கோவில் கட்டி முடிவு பெற்றதற்கும் ஒரு கதை ஏற்பட்டிருக்கிறது. விபாஜித் என்ற ஒருவர் எங்கெல்லாமோ சுற்றித்திரிந்துவிட்டுக் கடைசியாக ஒரு தோப்பில் இளைப்பாறிக் கொண்டிருந்தனராம். அப்பொழுது சில தேவகன்னிகைகள் அருகிலிருந்த ஒரு குளத்தில் ஸ்நானம் செய்ய வந்தார்களாம். அவர்களுள் ஒருத்தி குபேரனது மகள். குளத்தில் இறங்குமுன் அவள் தரித்திருந்த தேவர்களது கொடையாகிய விலையற்ற கால்நகை ஒன்றைக் கரையில்கழற்றிவைக்க அதைப் பட்சிபொன்று பழமெனத் தூக்கிப்போய் அத்துடன் விபாஜியின் தலைக்குமேல் வந்ததும் அது பழமல்லவென்றறிந்து கீழே போட அது அவரது மடியில் விழுந்தது. குபேரனது மகள் அதைத் தேடிவந்து தனது மற்ற நகைகளையெல்லாம் கொடுத்து அக்கல்நகையை விபாஜியினிடமிருந்து பெற்றுப் போக விபாஜியும் அந்நகைகளை விற்ற பொருளைக் கொண்டு இக்கோவிலைக் கட்டிவைத்தனராம். அந்த விபாஜியினது சிலை இப்பொழுதும் ஒரு முண்டு முடிச்சுகளுடன் கூடின ஒரு மிகப்பழைய மரத்தின் கீழிருக்கிறது! பிரதி தினமும் கூலியாட்கள் கோவிலின் வேலையைச் செய்தபிறகு சாயங்காலம் இம்மரத்தடியில் வர அவரவர்களது தினப்படி கூலி அம்மரத்திலிருந்து அவரவர்களது கைகளில் விழுந்து வந்ததெனக் கூறுகிறார்கள்!


இந்த ஊரில் பிரதி வருஷமும் முக்கியமான உற்சவம் கொண்டாடப்படுவது மாசி அதாவது பிப்ரவரி-மார்ச்சு மாதத்தில். அப்பொழுது வெகு ஜனங்

கள் இங்கு வருவது வழக்கம். இங்குள்ள நதியில் ஸ்நானம் செய்ய அம்மாதத்திய பௌர்ணமி தினம் விசேஷமானதெனக் கூறப்பட்டுளது. தங்கமுலாம் பூசியுள்ள கோவில் சிகரம் நின்று பார்த்தால் தெரியக் கூடியதாயிருக்கும். இந்நதியின் புண்ணிய மகிமையெனக் கூறப்ப[illegible] நதியில் ஸ்நானம்செய்வது மிகவும் விசேஷமாம். சில ஜாதியார்கள் இறந்து போனவர்களது எலும்புகளை மேற்கூறிய பௌர்ணமி தினத்தில் இந்த நதியில் கொண்டுவந்து போடுவதும் உண்டு.

செஞ்சி (Gingee):—இது திண்டிவனத்திற்கு மேற்கில் 16-மைல் தூரத்தில் திருவண்ணாமலைக்குப் போகும் ரஸ்தாவில் இருக்கிறது 1817-வது வருஷத்தில் இங்கிருந்த ஜில்லா முனிசீப்கோர்ட்டு திருக்கோயிலூருக்குக் கொண்டு போய்விடப்பட்டது. இது மூன்று செங்குத்தான பெரிய குண்டுக்கற்களுடன் கூடி ஏறிப்போக முடியாத பக்கங்களுடன் கூடிய குன்றுகளின் மீதிருக்கிறது. அக்குன்றுகளும் முக்கோண வடிவமாக ஏற்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் எல்லாப் பக்கங்களிலும் பலப்படுத்தப்பட்டிருக்கக்காணலாம். வரிசைவரிசையான கற்சுவர்கள் பக்கங்களில் கொத்தளங்களுடன் (படம் 4) கட்டப்பட்டிருக்கின்றன. பீரங்கிகள் ஏற்றச்சாலகங்களும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மறைந்திருந்து துப்பாக்கிகள்கொண்டு சுடக்கூடிய ஏற்பாடும் ஏற்பட்டுளது குறுகலாயும் மிக்க பலம் வாய்ந்தனவாயுமுள்ள வாயிற்படிகளும் இருக்கின்றன. ஒரு குன்றிலிருந்து மற்றதற்குப் போக மேற் கூறிய

வாறு அறுபதடி கனமும் 80 அடி அகலமுள்ள அகழியினால் சூழப்பட்டுள்ள சுவர்கள் ஏற்பட்டிருக்கின்றன.


குன்றுகளுக் கிடையிலுள்ள முக்கோண வடிவம் வாய்ந்த இடம் சுற்றிச் சுமார் மூன்று மைல் தூரம் வாய்ந்துள்ளது. இதுதான் அடிப்பாகத்திய கோட்டை. மூன்று குன்றுகளும் மேற்பாகத்திய கோட்டைக ளெனக் கூறலாம். இந்த அடிப்பாகத்திய கோட்டைக்



படம் (4)—செஞ்சிக்கோட்டை

குள் வர இரண்டு வாயிற்படிகள் உண்டு. வடக்கில் ஏற் பட்டுள்ள ஒன்று ஆற்காடு அல்லது வேலூர் வாயிலெனப் படும். கிழக்கிலுள்ள மற்றது புதுச்சேரி வாயிலெனப் படும். இதில் உட்புறமாய்க் கைதிகளை அடைக்க ஒரு வித கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் கிழக்கில் சுவருக்கு வெளியில் சமீபத்தில் முன் ஒரு சிறிய "பேட்

டை" அதாவது கிராமம் இருந்ததாம். அதுவும் ஒரு சாதாரணமாய்க் கட்டப்பட்டிருந்த மதில்களால் பந்தோபஸ்துசெய்யப்பட்டுக் கொத்தளங்களுடன் கூடியிருந்ததாம். மேல் கோட்டைகளுக்குப் போகப் பக்கங்களில் சிதறுண்டு கிடக்கும் பெரிய குண்டுக்கற்களின் மீதும் அவைகளுக்கிடையிலும் மிகவும் சாமர்த்தியமாகச் செதுக்கிக் கட்டி ஏற்படுத்தப்பட்டுள்ள படிகள் இருக்கின்றன. வடக்கிலுள்ள



படம் (5)—செஞ்சிக்கோட்டை

மேல்கோட்டைக்குக் "கிருஷ்ணகிரி" என்று பெயர். தெற்கிலுள்ளது "சந்திராயன் துர்க்க" மெனப்படும். உயரமானதும் மேற்கில் உள்ளதுமானது 'ராஜகிரி' (படம் 5) யென்பது எளிதில் ஏறி அடையமுடியாத கோட்டை. அதனடியில் "கலியாண மஹாலெனப்" படும் கோத்தியான மெத்தைக் கட்டடமுண்டு. இதற்குத் தெற்

84837

கில் "சங்கிலிதுர்க்க" யென்ற இன்னொரு சிறிய கோட்டையுண்டு. மேற்கூறிய வைகளெல்லாம் இப்பொழுது பாழடைந்து கிடக்கின்றன.

இக்கோட்டைக்குள் நேர்ந்த சம்பவங்களை அறிய இவ்விடத்தைப் பற்றிப் புராதன சரித்திரம் தெளிவாக இல்லை. பதினாறும் நூற்றாண்டுவரை இக்கோட்டை சம்பந்தமான யாதொரு சம்பவத்தை பற்றியுமே விவரங்கள் கிடைக்கவில்லை. பதினாறும் நூற்றாண்டில் நாட்டின் இந்த பாகத்தில் இது விஜயநகர அரசர்களது முக்கியமான துர்க்கமாக ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இந்த விஜயநகர வமிசத்தினர்கள் தான் மேற்கூறியுள்ள அற்புதமான கோட்டைகளின் பெரும் பாகத்தைக் கட்டி முடித்திருக்க வேண்டு மென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஏனெனில் அத்தகைய விஷயங்களில் அவர்களுக்கு வேண்டிய அனுபவமிருந் திருக்கிறது. பெல்லாரி ஜில்லாவில் ஹம்பி (Hampi) என்ற அவர்களது தலைமை நகரத்தில் மேற்கூறியமாதிரியே குன்றுகளின் மேல் கோட்டை கொத்தளங்கள் ஏற்படுத்திக் கொண்டிருந் திருக்கிறார்கள். இந்த விஜயநகர வமிசத்தவர்கள் தான் இந்த இடத்தில் மேற்கூறிய வேலைகளை முடிக்கப் போதுமான காலம் அமைதி வாய்ந்திருந்தது. இக் [illegible]களில் சில கட்டிடங்கள் முகம்மதியர்களது [illegible]ற்பட்டு[illegible]லிருந்து இவைகள் முகம் [illegible] த[illegible]ந்த [illegible]பொழுது கட்டி முடிவு [illegible]ட்டன [illegible]சகளாம். [illegible]தற்குக் காரணமில்லை யென்[illegible]தேகமறக் கூறலாம். ஏனெனில் அதே முகமதிய பத்ததியாக ஏற்பட்டுள்ள கட்டிடங்கள் முகமதியர்களது

சுவாதீனத்திலேயே இருந்திராத இடமாகிய ஹம்பி என்ற இடத்திலேயும் ஏற்பட்டிருக்கின்றன.

1644-வது வருஷத்தில் கோல்கொண்டா அரசன் விஜயநகர அரசர்களின் அதிகாரத்தைக் குலைத்து முதல் முதல் பிடித்துக்கொண்ட இடம் செஞ்சி. பிரக்கியாதி பெற்ற மதுரைத் திருமலை நாயக்கன் செஞ்சியைக் கோல் கொண்டா அரசன் பிடித்துக்கொள்ளாதபடி தடுக்க உதவி புரியக்கருதினான். அதற்காகக் கோல்கொண்டா அரசனுக்கும்பீஜப்பூர் அரசனுக்கும் ஏற்பட்டிருந்தபொறாமையைத் தெரிந்து கொண்டு பீஜப்பூர் அரசனது உதவியை நாடினான். அவ்வரசனும் ஒரு பெரிய குதிரைப்படையை அனுப்ப அத்துடன் திருமலை நாயக்கன் செஞ்சிக்குச் சென்றான். ஆனால் செஞ்சியை அடைந்ததும் பீஜப்பூர்ப் படைகள் தங்களது மதத்தைச் சேர்ந்த கோல்கொண்டா ராணுவத்துடன் சேர்ந்துகொண்டு முற்றுகையை விடுவிப்பதற்குப் பதிலாக முற்றுகைசெய்த விஷயத்தில் உதவி புரிந்தார்கள். ஆனால் கோல்கொண்டா அரசன் வேறிடங்களில் தொந்திரவு ஏற்பட்டதை நிவர்த்திசெய்ய அங்கிருந்து போகவேண்டி நேர்ந்தது. அதுதான் சமயமென்று திருமலைநாயக்கன் கோட்டையைத் தாக்க ஏற்பாடு செய்தான். ஆனால் அவனது படைகள் வேறு ஜாதியைச் சேர்ந்திருந்ததால் குழப்பம் ஏற்பட அப்பொழுது பீஜப்பூர்ப் படைகள் கோட்டையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்த ஏராளமான பொருளைக் கொள்ளையிட்டன. பிறகு அவர்கள் அக்கோட்டையைவிடாமல் முப்பதுவருஷ காலம் கைகொண்டிருந்து வந்தார்கள். பிறகு 1677-வது

வருஷத்தில் மஹாராஷ்டிர அரசன் சிவாஜி அதைக் கபடமாய்ப் பிடித்துக்கொண்டான். அவன் பீஜப்பூர் அரசனிடம் பெருக்கு வேலைக் கமர்ந்திருந்து அவனிடமிருந்து சம்பளம் பெற்றுவந்தபோதிலும் முகமதியர்களைக் கர்ணுடகத்திலிருந்தும் துரத்தி அந்நாட்டைத் தான் பிடித்துக் கொண்டு விடவேண்டுமென்ற எண்ணம் அவனிடம் குடி கொண்டிருந்தது. சிநேக பாவமாக அவன் செஞ்சியை அணுகிக் கோட்டையின் அதிகாரியைத் தானும் பீஜப்பூர் அரசனது மனிதன் என நம்பும்படி செய்து தன்னைச் சந்திக்க வரச் செய்து கபடமாய் அவனையும் மற்ற அதிகாரிகளையும் பிடித்துக் கைதிகளாக்கிக் கொண்டு செஞ்சிக் கோட்டையையும் எளிதாகக் கைக்கொண்டான். பிறகு ஔரங்கசீப் மஹாராஷ்டிரர்களை எதிர்த்தபொழுது சிவாஜியின் மகன் ராமராஜா என்றவன் செஞ்சிக்கு ஓடிப் போனுன். அங்கு தான் சிதறுண்ட மஹாராஷ்டிர சைனியம் ஒன்று சேர்ந்தது. ஔரங்கசீப் செஞ்சியைப்பிடித்துக் கொள்ளக்கருதி சூல்பிகர்சான் என்ற தனது சேனுதிபதியையும் தனது மகன் காம்பாக்ஷா (Kam Baksha) என்றவனையும் அதை நோக்கி அனுப்பினுன். இவர்கள் ஒவ்வொருவரும் தாம் தனியாக அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டு ஒரு தனி ராஜியத்தை ஸ்தாபித்துக் கொள்ள எண்ணங்கொண்டு ஊக்கத்துடன் வேலைசெய்யாதிருந்து வந்தார்கள். காம்பாக்ஷா சூல்பிகர்க்கானது எண்ணத்தை எடுத்துக் காட்டித் தனது தகப்பனுருக்குக் கடிதம் வரைந்தனுப்ப ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். சாரணர்களால் சங்கதிகளை அறிந்து கொண்டிருந்த சூல்பிகர்க்

கான் காம்பாக்ஷாவையே கைதிசெய்து அவனது மோசமான எண்ணத்தை எடுத்துக்காட்டிய கடிதத்துடன் அவனையே அவன் தகப்பனிடம் அனுப்பிவிட்டான். பிறகு கோட்டையை எதிர்ப்பதாக சூல்பிகர்கான் நடித்துக் கொண்டு வந்தான். முற்றுகையை எவ்வளவுகாலம் நீடித்து நடத்திவரலாமோ அவ்வளவு காலம் நீடித்து நடத்திவர இவன் கருதியதின் காரணம் பிரதிதினமும் எதிர்பார்த்திருந்ததேயாகும். ஔரங்கசீப்பின் மரணம் ஏற்பட்டதும் ஒன்று. சிவாஜியின் மகன் ராமன் கஞ்சா அபின் முதலிய லாகிரிப் பொருள்களைத்தின்று எப்பொழுதும் வெறியனாயிருந்தான். ஆதலால் அவன் செய்திருந்த ஏற்பாடு கோட்டைகளைக் காக்கக் போதுமானதாக வில்லை. அவனது உத்தியோகஸ்தர்கள் ஒருங்கு கூடி ஆலோசனை செய்து சூல்பிகர்கான் வசப்பட்டு விட்டார்கள். இறுதியில் செஞ்சி சூல்பிகர்கான் வசப்பட்டு அதைப்பாதுகாக்க சொரூப்சிங் என்ற ரஜபுத்திரன் ஏற்படுத்தப்பட்டான். 1750-வது வருஷத்தில் புஸ்ஸி என்றவனின் கீழ் பிரஞ்சுக்காரர்கள் செஞ்சியை முகம்மதியர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள். 1752-வது வருஷத்தில் இங்கிலீஷ்காரர்கள் இந்த இடத்தை எடுத்துக்கொள்ள முயன்றார்கள். ஆனால் அம்முயற்சி பயன்படவில்லை. 1762-வது வருஷத்தில் புதுச்சேரி பிடிபட்டவரையில் அது பிரெஞ்சுக்காரர்களிடமே இருந்து பிறகு தான் இங்கிலீஷ் காரர்களுக்குக் கிடைத்தது. அது முதல் அது அவர்களிடமே இருந்து வருகிறது.

புதுச்சேரி (Pondicherry).—இது பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமானது. அவர்களது ராஜதானியின்

Standard Press,
Printers,
765, Triplicane
High Road,
MADRAS.

## BY THE SAME AUTHOR

| | | | |
|---|---|---|---|
| Indian Festivities ... ... | 7 | 8 | 0 |
| Indian Shrines ... ... | 6 | 0 | 0 |
| Indian Customs ... ... | 3 | 0 | 0 |
| ayana ... ... ... | 1 | 8 | 0 |
| bharata ... ... ... | 0 | 12 | 0 |
| vilasam ... ... ... | 0 | 8 | 0 |

---

LS' READER (for use in Elemen-
y Schools)

| | | | |
|---|---|---|---|
| Book I ... | 0 | 3 | 0 |
| ,, II ... | 0 | 4 | 0 |
| ,, III ... | 0 | 5 | 0 |

---

ந்தியா —

| | | | |
|---|---|---|---|
| -தேச சரித்திரம்). இரண்டு பாகம் | 1 | 8 | 0 |
| இரண்டு பாகம்) ... ... | 1 | 0 | 0 |
| சாழன் சரித்திரம் ... | 0 | 8 | 0 |
| ம் ... ... ... | 0 | 8 | 0 |

Committee.